பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | புரட்டாதி 10 | புதன்கிழமை 26.09.2018 | கதிர் 325

**இனி இது ரகசியம் அல்ல!**

திலீபன் நினைவுத் தூபி விவகாரத்தை ஒட்டி நீதிமன்றத்தில் என்ன நடக்கும் என்று இப்பத்தியில் நேற்று எதிர்வு கூறினேனோ அது அப்படியே நடந்திருக்கின்றது. யாழ். மாநகர சபை ஆணையாளருக்காக ஜனாதிபதி சட்டத்தரணி

பக்கம் 03



# உண்ணாவிரதக் கைதிகளுக்கு விரைவில் சாதகமான தீர்வு!

## அவர்களது கோரிக்கை நியாயமானதே என்கிறார் பிரதி நீதியமைச்சர் துஷ்மந்த

கொழும்பு, செப்ரெம்பர் 26

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளின் கோரிக்கை நியாயமானதே. எனவே, அவர்களின் பிரச்சினைக்கு விரைவில் சாதகமான தீர்வு கிடைக்கும் - என்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பிரதியமைச்சர் துஷ்மந்த மித்திரபால 'காலைக்கதிர்' நாளிதழுக்கு நேற்றுத் தெரிவித்தார்.

பக்கம் 14

## கைதிகள் தொடர்பில் இன்று கூட்டமைப்பு – ரணில் பேச்சு

கொழும்பு, செப். 26

அனுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 9 அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே முக்கிய பேச்சு ஒன்று இடம்பெற

பக்கம் 14

# நல்லூர்த் தூபியில் திலீபனை நினைவேந்தத் தடையில்லை

## பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்தது யாழ். நீதிமன்றம்

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், செப். 26

நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் தூபியில் இன்று நடைபெறும் நினைவேந்தல் நிகழ்வுக்கு இடைக்காலத் தடை விதிக்குமாறு பொலிஸார் விடுத்த கோரிக்கையை நிராகரித்தது யாழ்.

பக்கம் 14



## தமிழர் தாயகமெங்கும் இன்று தியாகி திலீபன் நினைவேந்தல்



யாழ்ப்பாணம், செப். 26

தியாக தீபம் திலீபனின் 31 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று தமிழர் தாயகமெங்கும் உணர்வுபூர் வமாக அனுஷ்டிக்

பக்கம் 14

## வறுமையின் பிடியில் சிக்கவுள்ள இலங்கை

### உலக வங்கி எச்சரிக்கை

கொழும்பு, செப். 26

இலங்கையின் மக்கள் தொகையில் 5.7 வீதமானோர் வறுமையின் பிடியில் சிக்கும் அபாயம் காணப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது என உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

பக்கம் 14



தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவுக்கு வந்துள்ள புத்தளம் பகுதி சிங்கள இளைஞர், யுவதிகள் நேற்று முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியில் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர். (ஐ-81)

### மாற்றுத் தலைமை வேண்டுமா?

## விக்கிக்கு விரைவில் சம்பந்தன் பதிலடி!

கொழும்பு, செப்.26.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் மாற்றுத் தலைமை வர வேண்டும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்துக்கு விரைவில் உரிய பதிலை வழங்குவேன் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

பக்கம் 14

## கோட்டாவின் ஆசியுடனேயே கொழும்பில் கடத்தல்கள், தாக்குதல்கள் அரங்கேறின!

### 4 மணிநேர விசாரணையின் பின் பொன்சேகா தகவல்

கொழும்பு, செப். 26

தெற்கில் நடைபெற்ற தாக்குதல்கள், கடத்தல்கள் போன்ற சம்பவங்கள் கோட்டாபயவால் வழிநடத்தப்பட்ட குழுவாலேயே முன்னெடுக்கப்பட்டன என்று அமைச்சரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணை

பக்கம் 14

## தொகுதிகளைப் பலப்படுத்தி தேர்தலுக்குத் தயாராகுங்கள்!

### ஐ.தே.கவினருக்கு ரணில் பணிப்புரை

கொழும்பு, செப். 26

கிராம – தொகுதி மட்டத்திலான அரசியல் செயற்பாடுகளைப் பலப்படுத்தி மாகாணசபைத் தேர்தலை

பக்கம் 14

## தமிழரசுக் கட்சிக்கு எதிரான வழக்கை பிரகாஷ் வாபஸ்

யாழ்ப்பாணம், செப். 26

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்தும், அதன் மூலம் வலிதெற்கு பிரதேச சபை உறுப்பினர் பதவியிலிருந்தும் தம்மை விலக்குவதற்கு எதிராக யாழ்.

பக்கம் 14

## மன்னார் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணி இடைநிறுத்தம்

### இதுவரை 143 எலும்புக்கூடுகள் மீட்பு

மன்னார், செப். 26

மன்னாரில் சர்ச்சைக்குரிய மனிதப் புதைகுழியில் முன்னெடுக்கப்பட்டுவந்த அகழ்வுப் பணிகள் ஒரு

பக்கம் 14

காலைக்கதிர் Kalaikkathir



# மஹிந்த ராஜபக்ஷ தலைமைத்துவத்திலான அரசை உருவாக்க அனைவருமே ஒன்றிணைய வேண்டும்!



## கோட்டாபய ராஜபக்ஷ தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போன்று வெளிப்படையாகவும் நேர்மையாகவும்தீர்மானங்களைஎடுக்கக் கூடிய தலைமைத்துவத்திலான அரசு ஒன்றை உருவாக்க அனைவரும் ஒன்றினைய வேண்டும் எனத் தெரிவித்த முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ, சட்டம் இல்லாத நாட்டில் சுதந்திரம் இருக்காது எனவும் சுட்டிக்காட்டினார்.

பொலன்னறுவையில் இடம் பெற்ற எலிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

நாட்டின் இறையான்மை ஒருமைப்பாடு மற்றும் தேசிய பாதுகாப்பு போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டதாகவே மஹிந்த ராஜபக்ஷவின் 9 ஆண்டு கால ஆட்சி காணப்பட்டது. பயங்கரவாதம், அடிப்படைவாதம் மற்றும் வன்முறைகள் அற்ற நாட்டில் சிங்கள தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய சர்வ இன மக்களும் அச்சமின்றி வாழக் கூடிய ஒரு கொள்கை முன்னெடுக்கப்பட்டது.

மஹிந்த சிந்தனை ஊடாக நாட்டின் விவசாயிகளுக்கு சிற்நத சேவைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதே போன்று தேசிய வர்த்தகங்கள் பாதுகாக்கப்பட்டன. மேலும் துறைமுகங்கள் விமான நிலையங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் என பெரும் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தார். ஆனால் இன்று ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி குறித்து அனைவரும் கருத்துக்களை தெரிவிக்கின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி காலத்தில் பாரிய யுத்திற்கு முகங் கொடுத்தும் நாட்டின் பொருளாதாரத்தில் வீழ்ச்சி ஏற்படாது முன்னோக்கி கொண்டு சென்றோம். ஆனால் ஜனவரி 8 ஆம் திகதி ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் நிலையான கொள்கையோ பொருளாதார இலக்குகளோ அற்ற நிலையில் நாடு படுபாதாளத்தில் விழுந்துள்ளது. முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் அனைத்தும் கைவிடப்பட்டது. நான்கு லட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பு இல்லாமல் போனது.

பொருளாதாரம், தேசிய பாதுகாப்பு மற்றும் சட்டம் போன்ற அனைத்து துறைகளிலும் அரசாங்கம் வீழ்ச்சி நிலையிலேயே உள்ளது. இந்த நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுத்து மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் உருவாகக் கூடிய அரசின் ஊடாக வெற்றி இலங்கை அடைவதற்கான கொள்கைகளைத் தயாரித்து வருகின்றோம். தொழில் சார் நிபுணர்கள், புத்திஜீவிகள் உள்ளிட்ட பல் துறைசார் நிபுணர்களிடமிருந்து கருத்துக்களை உள்வாங்கி திட்டமிடுகின்றோம். எதிர் தரப்பினரை பழிவாங்கும் நிலையிலேயே தற்போதைய ஆட்சியாளர்கள் உள்ளனர்.

கட்டுநாயக்கவில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தை அடுத்து அப்போதைய பொலிஸ்மா அதிபர் 2 வருடங்களுக்கு முன்பதாகவே சேவையிலிருந்து ஓய்வு பெற்றனர். ஆனால் இன்று பொலிஸ்மா அதிபரின் செய்றபாடுகள் கோமாளித்தனமாக உள்ளமை ஊடகங்களில் காண முடிகிறது.

புதிய நீதி மன்றத்தை ஸ்தாபித்து அதில் முதலாவது வழக்காக டீ.ஏ.ராஜபக்ஷ நினைவு தூபி அமைத்தமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. நினைவு தூபி அமைத்தமை தேசிய பொருளாதாரத்தில் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டதாக காண்பிக்க அரசு முயற்சிக்கின்றது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி இவர்கள் கொண்டு வந்த அமைதி என்ன? பெரிய போரை நிறுத்தி மஹிந்த ராஜபக்ஷ நாட்டில் உருவாக்கிய ஜனநாயத்தையும் சமாதானத்தையும் யாரும் மறந்துவிட முடியாது. நாட்டைக் கையளிக்கும் போது யாருக்கும் அச்சுறுத்தல் இருந்ததில்லை.

சட்டம் இல்லாத நாட்டில் சுதந்திரம் இருக்காது. தேசிய பாதுகாப்புக்காக நிறுவப்பட்டிருந்த புலனாய்வு திட்டங்கள் பாதுகாப்பு கட்டமைப்புக்கள் அனைத்தும் சீரழிந்து விட்டன. புலனாய்வு பிரிவுகளில் எச்சரிக்கைகள் குறித்து அரசு கவனத்தில் கொள்வதில்லை.

ஆகவே வெளிப்படையாக தீர்மானங்களை எடுக்கக் கூடிய தலைவர் ஒருவரினால் மாத்திரமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. எனவே மஹிந்த ராஜபக்ஷ போன்று வெளிப்படையாக தீர்மானங்கள் எடுக்கக் கூடிய தலைவருடன் ஆட்சி அமைக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு 4 கோடி 80 இலட்சம் டொலர்களை அபிவிருத்தி உதவியாக வழங்க அமெ. முன்வந்தது!

ஐக்கிய அமெரிக்காவின் மில்லேனியம் சவால்கள் கூட்டுத்தாபனம் 4 கோடி 80 லட்சம் அமெரிக்க டொலர்களை அதாவது சுமார் 8000 கோடி நிதியுதவியை இலங்கையின் அபிவிருத்தி பணிகளுக்காக வழங்க முன்வந்துள்ளது என அக் கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி புரொக் பேர்மன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 73 ஆவது பொதுச்சபை அமர்வில் உரையாற்றுவதற்காக நியூயோர்க்கிற்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று முன்தினம் பிற்பகல் சந்தித்தபோதே மில்லேனியம் சவால்கள் கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிதியுதவியை வழங்குவதற்கான வரைவு ஏற்கனவே



தயாரிக்கப்பட்டுள்ளதுடன், விரைவில் அதனை அமெரிக்க செனட் சபையின் அனுமதிக்காக முன்வைக்கவுள்ளோம் என்றும் புரொக் பேர்மன் தெரிவித்தார்.

செனட் சபையின் அனுமதியை பெற்றுக்கொண்டதன் பின்னர் எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் கொழும்பில் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட எதிர்பார்ப்பதாக தெரிவித்த அவர், அந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பங்குபற்றுவாராயின் தாம் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன் எனத் தெரிவித்தார்.

அவரது வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, ஐக்கிய அமெரிக்க அரசு நீண்ட காலமாக இலங்கைக்கு வழங்கிவரும் அபிவிருத்தி உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் இந்த நிதியுதவி தொடர்பில் பாராட்டு தெரிவித்த ஜனாதிபதி, இலங்கை பயணிகள் போக்குவரத்து சேவையின் அபிவிருத்திக்கும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்குமான புதிய செயற்திட்டமொன்றை அமுல்படுத்த இந்த நிதியை முதலீடு செய்ய எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அமைச்சர்கள் பாட்டலி சம்பிக்க ரணவக்க, திலக் மாரப்பன ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# ரயிலுடன் மோதி ஒருவர் படுகாயம்!

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கி பயணித்த உடரட்ட ரயிலுடன் ஒருவர் மோதுண்டு பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை நோக்கி பயணித்த உடரட்ட ரயிலுடன் ஒருவர் மோதுண்டு பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று பகல் 1.45 மணி அளவில் இடம்பெற்றது என தெரிவிக்கப்படடுள்ளது.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த ரயிலுடன் ஹற்றன் மல்லியப்பு சந்தியிலுள்ள ரயில் கடவைக்கு அருகிலேயே இந்த நபர் ரயிலுடன் மோதுண்டு காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

இவ்வாறு ரயிலு டன் மோதுண்ட நபர் 40 வயது மதிக்கதக்க நபர் எனவும் அவர் மதுபோதையில் இருந்ததன் காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நபர் மேலதிக சிகிச்சைகளுக்காக கண்டி வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ள தெற்கு மீனவர்களை வெளியேற உத்தரவு!

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள அரசதளத்தில் சட்டவிரோதமான முறையில் வாடி அமைத்து தங்கியுள்ள கடலட்டை பிடிப்பவர்களை உடனடியாக வெளியேற்றுமாறு கிளிநொச்சி நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் வாடி அமைத்து தங்கியுள்ள தென்னிலங்கையைச் சேர்ந்த கடலட்டை பிடிப்பவர்களை உடனடியாக வெளியேற்றுமாறு அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டதுடன் பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்திருந்தனர்.

இதனையடுத்து அங்கு தங்கியுள்ள எட்டு அட்டை பிடிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக மருதங்கேணிப் பிரதேச செயலகத்தால் கிளிநொச்சி நீதிமன்றில் கடந்த 21 ஆம் திகதி வழக்குத்தாக்கல் செய்யப்பட்ட நிலையில் இதற்கான தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா இத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

இந்த மீனவர்கள் உடனடியாக வெளியேறத் தவறும் பட்சத்தில் தீர்ப்பின் பிரதியைப்பெற்று பொலிஸில் முறையிட்டு வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என மருதங்கேணிப் பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

# அரசின் முறையற்ற பொருளாதார கொள்கையால் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வருகின்றது!

## அனுரகுமார திஸாநாயக தெரிவிப்பு

அரசின் முறையற்ற பொருளாதார கொள்கையின் காரணமாக ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. எனினும் இவ்விடயம் தொடர்பில் அரசு பொறுப்பற்ற விதமாகவே செயற்படுகின்றது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயகத் தெரிவித்துள்ளார்.

மேலும் ரூபாவின் பெறுமதியின் வீழ்ச்சிக்கு வெகுவிரைவில் தீர்வு காணாவிடின் நாட்டின் கடன் தொகை 300 பில்லியனாக அதிகரிக்கும் அபாயம் தோன்றும் எனவும் சுட்டிக்காட்டினார்.

மக்கள் விடுதலை முன்னணியின் கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

உலக சந்தையில் இலங்கையின் உற்பத்திகள் இன்று வீழ்ச்சியடைந்து வருகின்றன. ஆனால் அரசு மக்கள் மத்தியில் பொய்யான நம்பிக்கையை மாத்திரம் வழங்கி வருகின் றது. நாட்டு மக்களுக்காக அரசு செயற்பட வேண்டுமே தவிர சர்வதேசத்தின் விருப்பத்திற்கு அமைய அல்ல என்ற விடயத்தை மக்களே வெகுவிரையில் புரிய வைப்பார்கள்.

டொலருடன் ஒப்பிடுகையில் ரூபாவின் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சியடையுமாயின் ஒரு டொலரின் பெறுமதி 200 ரூபாவாக உயர்வடையும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

காலைக்கதிர்
Kalaikkathir

## சூரிய உதயம் பார்க்க வாய்ப்பு

கொழும்பு, செப். 26

சிகிரியா மலைக்குன்றின் உச்சியிலிருந்து சூரிய உதயத்தைப் பார்க்கும் வாய்ப்பை சுற்றுலாப் பயணிகள் மற்றும் இலங்கையர் பெற்றுள்ளனர்.

உலக சுற்றுலா தினம் நாளை அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்நிலையில், நாளை அதிகாலை 5 மணி முதல் சிகிரியா மலைக் குன்றைப் பார்வையிட முடியும் என மத்திய கலாசார நிலையம் அறிவித்துள்ளது.

# புலிகளை நினைவு கூரலாமா என்ற கேள்வி திலீபன் நினைவேந்தல் வழக்கில் தவிர்ப்பு

## சட்டத்தரணி குருபரன் ஆதங்கம்

யாழ்ப்பாணம், செப். 26

**தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலைத் தடை செய்யக் கோரிய வழக்கில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி உள்ளிட்ட சட்டத்தரணிகள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களை நினைவு கூரலாமா? என்பது தொடர்பிலான கேள்வியை மிகக் கவனமாகத் தவிர்த்துள்ளனர். அதற்கான வாய்ப்பு இன்று இழக்கப்பட்டுள்ளது. இதை வாதாடி நீதிமன்றம் அங்கீகரிக்குமா? என்பது இங்கு முக்கியமல்ல. ஏன் நாம் இந்தக் கேள்வியைக் கேட்பதில்லை?**

**- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் சட்டத்தரணி கு.குருபரன்.**

தியாக தீபம் திலீபனின் நினைவு தினத்தைதடைசெய்யக்கோரிநடைபெற்ற வழக்கு விசாரணைகள் தொடர்பில் சட்டத்தரணி குருபரன் தனது முகநூலில் மேற்கொண்டவாறு பதிவிட்டுள்ளார்.

முகநூல் பதிவில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:

திலீபன் அண்ணாவின் நினைவிடம் தொடர்பிலான விண்ணப்பம் இன்று தள்ளு படி செய்யப்பட்டது மகிழ்ச்சிதான். ஆனால் இந்தத் தீர்ப்பு பெற முன்வைக்கப் பட்ட வாதங்கள், வழக்கு எப்படி நீதிமன்றுக்கு வந்தது என்பதற்கு பின் உள்ள நுட்பமான அரசியல் அபத்தமானவை. (வழக்குவந்ததுஎப்படிஎன்பதுதொடர்பிலான ஊகங்களை தவிர்க்கிறேன். மன்றின் முன் வந்த வாதங்கள் பற்றி கூறுகிறேன்).

தியாகிதிலீபன்அண்ணாவின்நினைவுத் தூபிக்கு வேலி அமைத்தது அரசின் பணத்தில்தான். நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் திரட்டு நிதி மற்றும் எனது திரட்டு நிதி ஒதுக்கீட்டில் தூபி கட்ட (மீளமைக்க என்று தானும் சொல்லவில்லை) நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே திலீபன் அண்ணாவின் தூபி இலங்கை அரசின் பணிப்பின் பிரகாரமே கட்டப்படுகின்றது என்ற வாதத்தை ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் முன்வைத்தார்.

மாநகர சபையின் தீர்மானத்தின் பெயரில்நிகழ்வுகள்நடப்பதாகவும்வாதிடப்பட்டது. இது இந் நிகழ்வுகள் சட்டபூர்வமானாவை என்பதை காட்டுவதாகவும் வாதங்கள் முன்வைக்கப்பட்டது.

முதல்வர் ஆனோல்டின் (நாம் தான் செய்வோம் வேறு யாரும் செய்ய முடியாது) அறிவிப்பில் இருந்து இன்று மன்றில் இடம்பெற்ற வாதங்கள் வரை திலீபன் அண்ணாவின் நினைவிடத்தையும் அங்கு அஞ்சலி நிகழ்வு நடத்துவதையும் மாநகர சபையின் ஏகபோக உரிமைக்குள் கொண்டு வந்து நினைவுகூரலை பொதுப் பரப்பில் இருந்து குறுக்கும் செயற்பாட்டின் உச்சம் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும்.

இதுகூட்டமைப்புசெய்தாலும்பிழைதான். முன்னணி செய்தாலும் பிழைதான். முதலமைச்சர் செய்தாலும் பிழைதான். அரச அதிகாரம் நினைவு கூறலை ஒழுங்கு படுத்துவதை ஒரு போதும் ஏற்க முடியாது. அரச அதிகாரம் நினைவு செயற்பாடுகளை வசதிப்படுத்தலாம். ஆனால் உடைமை கொள்ள முடியாது.

மன்றில் மாநகர சபையின் சட்டத்தரணிகள் கவனமாக தவிர்த்த விடயம் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களை நினைவுகூரலாமா? என்பதுதொடர்பிலான கேள்வியை. எம்மையும் தவிர்க்குமாறு ஆலோசனை வழங்கினர். இதை நீதிமன்றில் பிரச்சினையாக்குவது முக்கியமானது. அதற்கான வாய்ப்பு இன்று இழக்கப்பட்டுள்ளது. இதை வாதாடி நீதிமன்றம் அங்கீகரிக்குமா? என்பது இங்கு முக்கியமல்ல. ஏன் நாம் இந்தக் கேள்வியை கேட்பதில்லை என்பதே முக்கியமானது.

இன்று (நேற்று) நாம் மன்றில் தோன்றி அக்கறையுள்ள தரப்பு என்ற வகையில் எமது தரப்பைக் கேட்க வேண்டும் என வாதாடினோம். இது மாநகர சபையின் காணிப் பிரச்சினை அல்ல என்று நிலைப் பாடு எடுத்தோம். பொது மக்களின் நினைவு கூரும் உரிமையை பற்றியது அதையும் கேளுங்கள் என்று சொல்லிப் பார்த்தோம். மன்று ஏற்கவில்லை.

இப்படியான வழக்குகளில் யார் தோன்றலாம் என்பது விசாலமாக பார்க்கப்படுவது வழமை. ஆனால் எனது காணியில் அமைக்கப்பட்ட கட்டம் சட்டபூர்வமாக கட்டப்பட்டதா? என்ற தோரணையில் வழக்கு முடிவடைந்திருக்கிறது– என்றுள்ளது.(ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திலீபன் நினைவுத் தூபி விவகாரத்தை ஒட்டி நீதிமன்றத்தில் என்ன நடக்கும் என்று இப்பத்தியில் நேற்று எதிர்வு கூறினேனோ அது அப்படியே நடந்திருக்கின்றது.

யாழ் மாநகர சபை ஆணையாளருக்காக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் முன்னிலையாகி வாதிடும் அதேசமயம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி வீ.மணிவண்ணன் மற்றும் அவருடன் சேர்ந்தோரும் இவ்வழக்கில் ஆஜராவார்கள் என்று கூறப்பட்டாலும், வழக்கில் சம்பந்தப்படாத அவர்கள் யார் சார்பில் முன்னிலையாவார்கள் என்பது சிக்கலே எனக் கோடி காட்டியிருந்தேன்.

நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டபடி பொதுநலன் கருதியும் பாதிக்கப்படுவோரின் கரிசனை கருதியும் தாங்கள் முன்னிலையாகின்றனர் என மேற்படி அணியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி குருபரனின் வாதத்தை நீதிமன்றம் ஏற்கவில்லை. அதனால், இந்த வழக்கில் அவர்கள் தரப்பின் நியாயத்தை – வாதத்தை – முன்வைப்பதற்கு வாய்ப்பில்லாமல் போயிற்று.

பொலிஸ் தரப்பைப் பொறுத்தவரை இது பொல்லைக் கொடுத்து அடி வாங்கிய வேலையாகிவிட்டது.

இந்த நிகழ்வைத் தடுப்பதற்குப் பொலிஸார் எடுத்த குறுக்கு வழி முயற்சி திலீபன் நினைவுநிகழ்வுக்கும், நினைவுத்தூபிக்கும் சட்ட ரீதியிலான ஓர் அந்தஸ்தை – தகைமையை – நீதிமன்றம் மூலமே வழங்கச் செய்து விட்டது.

நேற்று இப்பத்தியில் நான் குறிப்பிட்டமை போன்று இத்தீர்ப்பு ஒரு வரலாற்றுத் திருப்புமுனை உத்தரவாகவே வந்திருக்கின்றது.

இனி, நாளை மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ போன்ற தரப்பு அரசு ஆட்சிக்கு வந்தாலும் கூட இந்த நினைவுத் தூபிக்கும் நினைவேந்தல் நிகழ்வுக்கும் தடை விதிப்பதற்கு இதற்கு மேல் உள்ள ஒரு நீதிமன்றத்தின் உத்தரவைப் பெற்றாக வேண்டியிருக்கும்.

இந்தியத் தரப்புக்கு எதிராக அஹிம்சைப் போர் தொடுத்த மாவீரன் தியாகி திலீ பனின் நினைவாக இந்தத் தூபியை மாநகர சபையின் கட்டுப்பாட்டில் இருக்கும் காணியில், அதுவும் இந்தியப் படை இங்கு நிலை கொண்டிருந்த போதே, துணிச்சலோடு அமைத்த அந்நேரத்தின் யாழ் மாநகர ஆணையாளர் சி. வீ.கே. சிவஞானம் –

இப்போது இலங்கை அரசுடன் பேணப் ப டுகின்ற அரசியல் நட்புறவைப் பயன்படுத்தி, அரசின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்தத் தூபியின் புனரமைப்புக்குத் தலா இரண்டு லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து, அதைக் கட்டி முடிக்கும் பணியை யாழ் மாநகர சபையிடம் ஒப்படைத்து, அதன் வாயிலாக இந்தச் செயற்பாடுகள் எல்லாவற்றுக்கும் சட்ட அங்கீகாரமும், பெறுமானமும் பெற்றுக் கொடுத்த யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவஞானம் சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் –

அவர்களின் இந்தப் பணிக்காக மெச்சப் பட வேண்டியவர்கள்.

எது, எப்படியோ, பொலிஸ் ஏற்படுத்த முயன்ற குழப்பம் திலீபன் நினைவேந்தல் நிகழ்வுக்கு சட்ட அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்துவிட்டது.

இலங்கை அரசின் சட்ட அங்கீகாரம் பெற்ற நிலையில் புலிப் போராளி ஒருவரின் நினைவேந்தல் நிகழ்வு நடைபெறுகின்றது என்றால் அது தியாகி திலீபனுடையதுதான் என்று சொல்லும் நிலையைப் பொலிஸாரின் இந்தத் தடை விதிப்பு முயற்சி ஏற்படுத்தி விட்டது என்று கூறினால் அது தப்பில்லைத்தானே....!

**- மின்னல் -**

# சித்தன்கேணி ஸ்ரீ கணேசாவில் நூற்றாண்டு விழா நாளை

சித்தன்கேணி, செப்.26

சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலய நூற்றாண்டு விழா, நிறுவுநர் நாள், பரிசளிப்பு விழா மற்றும் 'கணேசதீபம்' நூல் வெளியீடு நிகழ்வுகள், நாளை வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் பா.பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் சித்தன்கேணி வீணா கான பீடத்தின் குரு முதல்வர் வண.சிவஸ்ரீ வாசுதேவக் குருக்கள் ஆசியுரை நிகழ்த்துவார்.

பிரதம விருந்தினர்களாக கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன், திருமதி குகாநந்தினி இராதாகிருஷ்ணன் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜாவும், கௌரவ விருந்தினர் களாக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சூ.நோபேட் உதயகுமார், நிறுவுநரின் பேரனும் (லண்டன்) பழைய மாணவருமாகிய க.மகாதேவா ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிறுவுநர் உரையை ஒய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் (அழகியல்) திருமதி தெ.அருள்மயம் ஆற்றுவார்.

'கணேசதீபம்' நூலை யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் வெளியிட்டு வைப்பார். வலிகாமம் வலய உதவிக் கல்விப் பாணிப்பாளர் (தமிழ்) க.சுந்தரலிங்கம் நூல் மதிப்பீட்டுரை நிகழ்த்துவார். (இ)

# இரட்டைக் குழந்தைகளை பிரசவித்த தாய் உயிரிழப்பு

## யாழ்.போதனா வைத்தியசாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 26

இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்த தாயார் ஒருவர் உயிரிழந்துள்ளார் என யாழ். போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

அம்னியோரிக் திரவம் குருதியில் கலந்ததால் அவர் உயிரிழந்தார் என சட்ட மருத்துவ அறிக்கை தெரிவிக்கின்றது.

தீவகம் வேலணையைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தாயாரான விஜயகுமார் நிரோஜனி (வயது–32) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கர்ப்பிணித் தாய் கடந்த ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவர் பிற்பகல் 3 மணியளவில் இரண்டு ஆண் குழந்தைகளைப் பிரசவித்துள்ளார்.

இந்த நிலையில் தாயார் மாலை 4 மணியளவில் உயிரிழந்துள்ளார் என்று சட்ட மருத்துவ விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாயாரின் அம்னியோரிக் திரவம் (பன்னீர்க்குடம்) குருதியில் கலந்து கொண்டதால் இறப்பு ஏற்பட்டது என்று சட்ட மருத்துவஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலம் நேற்றுத் திங்கட்கிழமை மாலை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை, உயிரிழந்த தாயாரின் இரட்டைக் குழந்தைகள் ஆரோக்கியமான நிலையில் உள்ளனர் என்று யாழ். போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ–7)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தேவை ஒரு திலீபன்

**ஒரு வரலாற்றுத் திருப்புமுனையை ஏற்படுத்திய சரித்திர நாயகனின் நினைவு தினம் இன்றாகும்.**

**ஒரு கணத்தில் தம்மைத் தாமே சிதறடித்து, எதிரிக்குப் பேரிழப்பை ஏற்படுத்தும் உயிராயுதங்களாக ஆயிரத்துக்கும் மேற்பட்டோரைக் கொண்டிருந்த புலிகள் இயக்கத்திலிருந்து முகிழ்ந்த பிறிதொரு முத்து திலீபன்.**

**ஆயுத வழிப் போராட்டத்தை முன்னெடுத்த வீரர்கள் மத்தியில் அஹிம்சை வழியில் – அற நெறியில் – தீரம் புரிந்த ஒப்புயர்வற்ற சாதனையாளன் அவன்.**

**மறவழியில் போரடும் மாமனிதர்கள் அற வழியிலும் – அஹிம்சை மார்க்க்த்திலும் – காந்தீய நெறியிலும் – உச்சக் கட்ட ஈகத்தைப் புரியலாம் என்பதை உலகுக்கு நிரூபித்தவன் தியாகி திலீபன்.**

**அவனது சகாக்கள் அடுத்த கணத்தில் சாவை அரவணைக்கத் துணிந்து நின்றவர்கள். தம்மைத் தாமே நொடியில் தகர்த்து எதிரியை அடியோடு கலக்கியவர்கள் அவர்கள்.**

**ஆனால், திலீபன் இவர்களினின்றும் முற்றிலும் வேறுபட்டவன்.**

**அவனும் தனக்குத் தானே மரணதண்டனையை வழங்கும் பெரும் கொடையைச் செய்தவன்தான். தன்னைத் தானே சிலுவையில் அறையும் ஒப்பற்ற அர்ப்பணிப்பைப் புரிந்தவன். அவன் இந்த ஈகத்தைச் செய்வதற்காக அணு அணுவாக, நொடி நொடியாக அவஸ்தையை அனுபவித்து, சிறுகச் சிறுகச் செத்து, கணம் கணமாகப் பாடுகளைச் சுமந்தவன். அதுவும் ஒன்றல்ல, இரண்டல்ல, பதின்மூன்று நாள்கள் தன் இனத்துக்காகத் தன்னை வருத்தி உயிர்த் தியாகம் செய்தவன்.**

**உண்ணாநோன்பிருப்பது மகத்தான காரியம் என்றால், சாகும் வரை அதைத் துணிவோடு, விடாது கடைப்பிடிப்பது மிகவும் மகத்தானது. அதையும் தாண்டி, உயிர் பிரியும் வரை ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல் நோன்பிருப்பது – கடைசி உயிர் மூச்சுப் பிரியும் வரை பதின்மூன்று நாள்கள் உடல் அவலத்தை அனுபவித்தபடி, மாறாத உறுதியோடு அத்தவத்தை இயற்றுவது – நினைத்துப் பார்க்கவே மனதை நடுங்கவும், நெருடவும் வைக்கும் மிக உன்னத தியாகம்.**

**நவீன உலகுக்கு அறவழிப் போராட்டத்தை – அஹிம்சை ஆயுதத்தை – போதித்த மகாத்மா காந்தியால் கூட அந்த நெறிமுறையின் மீதான தன் உறுதியை – தீரத்தை – திட சங்கற்பத்தை – திலீபனைப் போன்று செயலில் செய்து காட்டியிருக்க முடியுமா என்பது சந்தேகமே.**

**தன்னைத் தானே வருத்தி, அதன் மூலம் மற்றவர்களைத் தன் வழிக்குக் கொண்டுவரும் தந்திரோபாயப் போராட்ட மார்க்கமாக அஹிம்சை நெறியை வரித்துக் கொண்ட மகாத்மா காந்தி கூட, அந்த உத்தியின் ஒரு பகுதியாக மற்றவரின் சிந்தனையைத் தாம் ஆகர்ஷித்து, அவர்களைத் தன்வசப்படுத்துவதற்கான கால அவகாசத்தைப் பெறும் நோக்கோடுதான் தனது உண்ணாவிரதப் போராட்ட நடைமுறையை வகுத்துக் கொண்டார். அவர், உண்ணாநோன்பிருந்தாரே தவிர, நீராகாரம் கூட அருந்தாமல் இருக்கவில்லை. அதனால் வாரக் கணக்கில் அவர் போராட்டங்கள் நீடித்தன. அதற்கிடையில் யாரை இலக்கு வைத்து அந்தப் போராட்டத்தில் குதித்தாரோ அவர்களின் மனதைக் கரையச் செய்யும் இலக்கை அவரால் அடைய முடிந்தது.**

**மகாத்மா காந்தி கூட எண்ணிப் பார்க்கத் துணியாத வகையில் – நெறியில் – ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல் தன் உண்ணா நோன்பை நோற்பது என்பது – அதனால் நேரும் உடல் அவஸ்தையை அனுபவித்துத் தாங்கிக் கொள்வது என்பது – நினைத்துக் கூடப் பார்க்க முடியாத உச்ச ஈகம். அந்த நோவை பதின் மூன்று நாள்கள் அணு அணுவாக அனுபவித்த பின்னர்தான் திலீபனின் ஆன்மா நம்மை விட்டுப் பிரிந்தது.**

**அவன் சாவுக்கும் அஞ்சவில்லை. சாவுக்கு முந்திய நோவுக்கும் அஞ்சவில்லை. தன் இனத்துக்காக, தான் வரித்துக் கொண்ட கொள்கைக்காக, தன்னையே ஆகுதியாக்கும் மனத்திடம் – மானுடம் – அவனிடம் இருந்தது. அத்தகைய ஒரு திலீபனே இன்று நமக்குத் தேவை.**

**தமிழர்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கும் இன்றைய சூழலில், நமக்கு எஞ்சியிருக்கும் ஒரே மார்க்கம் – பாதை – அறவழிப் போராட்டம்தான்.**

**ஆனால், அந்த அறவழிப் போராட்டத்துக்கு உறுதியாக நின்று, முன்மாதிரியாக வழிகாட்டும் தலைமை நம்மிடம் இல்லை. அஹிம்சை நெறிப் போராட்டத்தைப் பொறுத்த வரையில் வாய்ச் சவடால் விட்டு, வெறும் வாய் வீரம் காட்டும் வெற்று வேட்டுக்களே இன்று பெரும்பாலும் நம் மத்தியில் அரசியல் செய்கின்றன.**

**அறவழியிலும் உறுதியாக நின்று போராடி, தென்னிலங்கையின் ஆழ்மனதையே ஓர் உலுப்பு உலுப்பி, ஓர் அசைப்பு அசைத்து, வழிப்படுத்தி, நம் பக்கம் திருப்புவதற்கு ஓர் அறவழித் திலீபன் நமக்கு இன்று அவசியப்படுகிறான்.**

**கொள்கைப் பற்றும், விலை போகாப் பேராண்மையும், நெஞ்சுறுதியும், இவை எல்லாவற்றையும் தாண்டி, இனத்துக்காகத் தன்னுயிரையும் ஈய்ந்தளிக்கும் தற்றுணிவும் மிக்க ஒரு திலீபன் நமக்குத் தேவை.**

**இன்றைய நமது அரசியல் கூத்தை அமைக்கும் நடிப்பு சுதேசிகளுக்கு மத்தியில் அப்படி ஓர் உன்னத புருஷன் நமக்குக் கிட்டுவானா? சில விடிவெள்ளிகள் வரலாற்றில் ஒரு தடவை மட்டும்தானே தோற்றும்!**

# கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக வடக்கு ஆசிரியர்களுக்குப் பணிச் சுமைகள்

## கல்வித் திணைக்களத்தைக் கண்டிக்கிறது இலங்கை ஆசிரியர் சங்கம்

கொழும்பு, செப். 26

பாட ஆசிரியர்களைப் பயன்படுத்தி – ஆசிரியர்களின் கற்பித்தல்செயற்பாடுகளுக்குமேலதிகமாக மாணவர்களின் தரவுகளை வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் இணையத் தளத்தில் தரவேற்றம் செய்யுமாறு நிர்ப்பந்தித்து வருவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இத்தகைய கல்வி அதிகாரிகளின் செயற்பாடுகளை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாக கண்டிக்கின்றது என அதன் தலைவர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்–

பின்தங்கிய பாடசாலைகள் பலவற்றுக்கு இணையத்தள வசதிகளை வடமாகாண கல்வித் திணைக்களம் இன்றுவரை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. இந்நிலையில் – வலயக் கல்வி அதிகாரிகள் மூலமாகவும் –அதிபர்கள் மூலமாகவும்– ஆசிரியர்களுக்கு மேலதிகமான ஆவணப் பதிவுச் சுமைகளை ஏற்படுத்த முனைகின்றனர்.

இணையத்தள வசதிகளற்ற பாடசாலைகளிலுள்ள மாணவர்களது விவரங்களையும்தமது இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யுமாறுவடமாகாணக்கல்வித் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளதாக அறிகின்றோம். அந்தப் பாடசாலை ஆசிரியர்கள் வெளியிடங்களுக்குச் சென்று தரவேற்றம் செய்யவதிலுள்ள பிரச்சினைகளையும், நிதி மூலங்களைப் பற்றியும் அவர்கள் சிந்திக்கவில்லை.

வெளிமாவட்டங்களுக்குரிய போதிய ஆசிரியர் ஆளணி வளத்தை வடமாகாணக் கல்வித் திணைக்களம் வழங்குவதில்லை. இந்த நிலையில்– வெளிமாவட்டங்களில் பின்தங்கிய பாடசாலைகளில் சேவையாற்றிவரும் ஆசிரியர்களுக்கு– மேலதிகமான சுமைகளையும் சுமத்தி வருகின்றனர். தமது திணைக்கள ரீதியாகப் பெறவேண்டிய தரவுகளுக்கும் இணையத்தள வசதிகளற்ற பாடசாலைகளின் நிலைமையைச் சிந்திக்காமல் ஆசிரியர்களைத் தரவேற்றம் செய்யுமாறு வற்புறுத்துவது மிகுந்த கண்டனத்துக்குரிய விடயமாகும்.

யாழ்.மாவட்டத்தில் பணியாற்றும் ஆசிரியர் பற்றிய விவரங்களை– வடமாகாணக் கல்வித் திணைக்களம் கடந்த இரண்டு வருடங்களில் மட்டும் பல தடவைகள் – விண்ணப்பங்களை அனுப்பி விவரங்களை சேகரித்திருந்தது.

ஆனால் – கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஆசிரியர் ஆளணி சீராக்கம் என்ற பெயரில் யாழ்.கல்வி வலய ஆசிரியர்கள் வடமாகாணக் கல்வியமைச்சால் மேற்கொள்ளப்பட்ட நேர்முகத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அதில் ஓய்வு பெறுவதற்கு இன்னும் சில வாரங்களே உள்ள நிலையில் ஓய்வு விடுமுறையைப் பெற்றிருந்த பல ஆசிரியர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டு நேர்முகம் நடைபெற்றுள்ளது.

வடமாகாணத்தில் இணையத்தளத் தரவேற்றம் செய்யும் செயற்பாடுகளுக்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிதி மூலங்கள் அதிகாரிகளுக்குக் கிடைப்பதாக அறியமுடிகின்றது. இத்தகைய நிதி மூலங்கள் தரவுகள் பெறுவதற்கு ஏற்படும் செலவுகளை ஈடு செய்வதற்கு வழங்கப்படுவதாகவும் அறிகின்றோம். ஆனால் – பாடசாலைகளில் கற்பித்தல் பணிக்கு மேலதிகமாக ஆசிரியர்களுக்குச் சுமையை ஏற்படுத்தி அதன் மூலம் மீதப்படுத்தப்படும் பணம் எங்கேசெல்கின்றது?என்பதையும் சம்பந்தப்பட்ட தரப்பினர் ஆய்வு செய்யவேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம்.–என்றார். (ஐ)

# மாநகர முதல்வரைக் கௌரவித்தது யாழ். சிகை ஒப்பனையாளர் சங்கம்



யாழ்ப்பாணம், செப். 26

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் யாழ். மாநகர முதல்வரைக் கௌரவிக்கும் நிகழ்வும் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

சமாசத் தலைவர் ஆ.உதய சங்கர் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். மாநகர மேயர் இ.ஆர்னோல்ட், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், சி.சுகிர்தன் மற்றும் கூட்டுறவு உதவி ஆணையாளர் பொ.மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில்வடக்கு மாகாண சபை மூலம் சிகை ஒப்பனையாளர் சங்கத்துக்கான ஆறு விதிகள் அடங்கிய புதிய நியதிச்சட்டம் உருவாக்கப்படவேண்டும் என்ற முக்கிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதன்போது சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்குத் தொடர்ச்சியாக உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கும் யாழ். மாநகர மேயர் இ.ஆர்னோல்ட் சிகை ஒப்பனையாளர் சங்கங்களினால் கௌரவிக்கப்பட்டார். (ஐ–7)

# தகவல் அறியும் உரிமை தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்



யாழ்ப்பாணம், செப். 26

உலக தகவல் அறியும் உரிமை தின நிகழ்வு 'கிராமத்துக்குத் தகவல் உரிமை, என்ற தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக எவ்வாறான தகவல்களைப் பெற முடியும், அதன் பயன்கள் என்ன என்பன தொடர்பாக விளக்கவுரைகள் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மேலதிக செயலர் திருமதி திலகா ஜயசுந்தர, அரச தகவல் திணைக்களத்தின் இயக்குனர் சுதர்சன குணவர்த்தன, யாழ்ப்பாண அரச அதிபர் ந.வேதநாயகன், சமூக ஆர்வலர்கள், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ–7)

## நாளை

**27.09.2018**
**வியாழக்கிழமை**

நட்சத்திரம்: துதியை மு.ப. 7.17 வரை
திதி: அச்சுவினி பி.இ. 3.18 வரை
சுபநேரம் : 7.32 – 9.02 வரை
இராகுகாலம் : 1.32 – 3.02 வரை

# மன்னார் பொது வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை நிலையம் திறப்பு





மன்னார், செப்.26

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சுமார் ஒரு கோடியே 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அதி நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்ட விசேட சத்திர சிகிச்சை நிலையம் நேற்றுக் காலை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண சுகாதார அமைச்சர்வைத்தியகலாநிதிஜீ.குணசிலன் வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து ஆஸ்திரேலியாவை தளமாகக் கொண்ட' 'My Dental Team' அமைப்பினூடாக இலங்கையைச் சேர்ந்த ஆஸ்திரேலியாவை வதிவிடமாகக் கொண்ட எம்.ருத்திரன் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான அதி நவீன வசதிகளுடன் கூடிய 'நடமாடும் பற்சிச்சை சேவை வாகனம்' நேற்று முற்பகல் 11.30 மணியளவில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் வைத்து எம்.ருத்திரன் என்பவரால் வட மாகாண சுகாதார அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இந்த 'நடமாடும் பற்சிச்சை சேவை வாகனம்' மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கில்றோயிடம் கையளிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து இடம் பெற்றநிகழ்வில் ஆஸ்திரேலியாவை வதிவிடமாகக் கொண்ட எம்.ருத்திரன் என்பவர்உட்பட அதிதிகள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வுகளில் மன்னார் பதில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கில்றோய், மன்னார் வைத்தியசாலையின் உதவி பணிப்பாளர் வைத்தியர் ஒஸ்மன் டெனி, வைத்தி நிபுணர்கள், வைத்தியர்கள், வைத்தியசாலை மற்றும்பிராந்தியசுகாதாரசேவைகள் பணிமனை அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கசிப்புடன் ஏழு பேர் கைது!

புதுக்குடியிருப்புபிரதேசத்தில் கசிப்புடன் கைது செய்த ஏழு பேரை நீதிமன்றில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என புதுக் குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மூன்று நாள்களாக புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் போது உடைமையில் கசிப்பு வைத்திருந்த ஏழு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தில் இரண்டு லீற்றர் கசிப்புடன் ஒருவரும், 375 மில்லி லீற்றர் கசிப்புடன் ஒருவரும் 3750 மில்லி லீற்றர் கசிப்புடன் ஒருவரும்,1500 மில்லி லீற்றர் கசிப்புடன் ஒருவருமாக நான்கு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

விசுவமடு பகுதியில் 3000 மில்லி லீற்றர் கசிப்புடன் ஒருவரும் 375 மில்லி லீற்றர் கசிப்புடன் ஒருவருமாக இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வள்ளிபுனம் பகுதியில் 2000 மில்லி லீற்றர் கசிப்புடன் ஒருவரும் கைது செய்யப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில்தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என புதுக் குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(க-81)

# திகன விமான நிலையம் தொடர்பாக ஆராய விசேட குழு நியமனம்!

இடைநிறுத்தப்பட்டிருக்கும் திகன உள்ளூர் விமான நிலையத்தின் நிர்மாணப்பணிகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் ஆராய்வதற்காக விசேட நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வாவினால் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் 137 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த விமான நிலையத்தின் நிர்மாணிப்பணிகள் சூழல் பாதுகாப்பு அமைப்புக்கள் உள்ளிட்ட பல அமைப்புக்களின் எதிர்ப்புக் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

அதன்படி நிறுத்தப்பட்டிருக்கும் நிர்மாணப் பணிகளின் குறைகளை இனங்கண்டு மீள நிர்மாணப்பணிகளை ஆரம்பிப்பதற்காக அமைச்சரினால் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீகிரிய குன்றை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்ட இளைஞர்கள்!



வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சீகிரிய குன்றை அவமதிக்கும் வகையில் நடந்துகொண்ட இளைஞர்களை உடனடியாக கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு, பிதுரங்கல ரஜமஹா விகாரையின் விகாராதிபதி வண. தானியகம ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

இளைஞர்கள் சிலர் பிதுரங்கல கல் மீது ஏறி, சீகிரியா பூமியை நோக்கி நிர்வாணமாக நிற்கும் புகைப்படங்கள் சிலவற்றை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்துள்ளனர்.

அரை மற்றும் முழு நிர்வாணமாக எடுக்கப்பட்ட இந்த புகைப்படத்தை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டமையினால் தற்போது சர்ச்சை நிலைமை ஏற்பட்டுள்ளது.

புனித பூமியை அவமதிக்கும் வகையில் செயற்பட்ட இந்த இளைஞர்களை உடனடியாக கைது செய்யுமாறு பரவலாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தநிலையில், சீகிரிய குன்றை அவமதிக்கும் வகையில்நடந்துகொண்ட இளைஞர்களை உடனடியாக கைதுசெய்யவேண்டும் என பிதுரங்கல ரஜமஹா விகாரையின் விகாராதிபதி தானியகம ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

# ஞானசார தேரர் ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு மீண்டும்!



கொழும்பு, செப்.25

பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் வைத்திய பரிசோதனை ஒன்றுக்காக சிறைச்சாலை வைத்தியசாலையிலிருந்து ஜயவர்தனபுர வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி ஜயவர்தனபுர வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையைத் தொடர்ந்து சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட ஞானசார தேரர் மீண்டும் ஒவ்வாமை காரணமாக செப்ரெம்பர் 6 ஆம் திகதி ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

நீதிமன்றத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியமை தொடர்பில் ஞானசார தேரருக்கு 6 வருட கடூழிய ச்சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டிலிருந்து வெளியேற இலங்கையர் 62,338 பேருக்கு பயணத் தடை!

நாட்டிலிருந்து வெளியேற இலங்கையர்கள் 62 ஆயிரத்து 338 பேருக்கு வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது என குடிவரவு குடியகல்வுத்திணைக்கள தகவல்கள் தெரிவித்துள்ளன.

நீதிமன்ற நடவடிக்கைகளை மையப்படுத்தி இந்த தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்றும் இதில் 30 ஆயிரம்பேர் வரையிலானோர் பாதுகாப்பு தரப்புக்களைச் சேர்ந்தவர்கள் எனவும் திணைக்களத்தின்உயர்அதிகாரிஒருவர் கூறினார். பாதுகாப்புத் தரப்பினரில் உயர் மட்டத்தில் இருந்து கடைநிலைவரையிலானஉத்தியோகத்தர்கள் பயணத் தடை விதிக்கப்பட்டோரில் அடங்குகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நீதிமன்றங்கள், இராணுவ நீதிமன்றம் ஊடாக இந்த நபர்கள் வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. 30 ஆயிரம் பாதுகாப்புதரப்பினருக்கு மேலதிகமாக அரசியல்வாதிகள், போதைப்பொருள் கடத்தல்காரர்கள், புலம்பெயர்தமிழ்அமைப்புக்களுடன் தொடர்பில் இருக்கும் சிலர், மத கடும்போக்காளர்கள் என வெளிநாட்டுப் பயணத் தடை பட்டியல் நீண்டுள்ளது.

# நாளை மின் தடை

யாழ்ப்பாணம், செப். 24

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை–

மன்னார் பிரதேசத்தில் – மடுமாதா ஆலயப் பிரதேசம், மடுமாதா ஆலயம், முகத்தாங்குளம் 2 ஆவது பண்ணை ஆகிய பிரதேசங்க ளிலும்,மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# சிறைச்சாலைகளின் பாதுகாப்புக்கு இனி புதிய திட்டம் அறிமுகம்!

சிறைச்சாலைகளின் பாதுகாப்பு சம்பந்தமாக மிக விரைவில் புதிய வேலைத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த இருப்பதாக நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கான திட்டங்கள் தற்போது வகுக்கப்பட்டுள்ளது என அந்த அமைச்சின் செயலாளர் மங்கலிகா அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் சிறைச்சாலைகளில் இடம்பெற்ற பல்வேறு மோசடிகளை தற்போது கட்டுப்படுத்த முடிந்துள்ளன என நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

விசேடமாக சிறைச்சாலைகளுக்குள் கைத்தொலைபேசி பயன்படுத்துவதை கட்டுப்படுத்த முடிந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு தரப்பினரின் ஒத்துழைப்புடன் அந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தப்படுகிறது என மங்கலிகா அதிகாரி மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir



# வாஸ் குணவர்த்தனவின் மனு; ஜனவரியில் விசாரணைக்கு!

வர்த்தகர் முஹமட் சியாம் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில், வழங்கப்பட்ட மரண தண்டனைக்கு எதிராக முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்த்தன உட்பட 6 பேர் தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு மனுவை விசாரிக்க உயர் நீதிமன்றம் திகதி அறிவித்துள்ளது.

இந்த மனு பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் மற்றும் பிரியந்த ஜயவர்தன முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இம் மனுவை ஜனவரி 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க நீதிபதிகள் குழாம் இதன்போது உத்தர விட்டுள்ளது.

வர்த்தகர் முஹமட் சியாம் கொலை செய்யப்பட்ட வழக்கில் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் தமக்கு எதிராக வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு சட்டத்திற்கு முரணானது என்றும் இதன் காரணமாக அந்தக் குற்றங்களில் இருந்து தம்மை நிபந்தனையற்ற விடுதலை செய்ய உத்தர விடுமாறு முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்த்தன மற்றும் அவரது புதல்வர் உள்ளிட்ட அறுவரும் தமது மேன்முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தினசரி ராசி பலன் (26.09.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் 10 ஆம் நாள். புதன்கிழமை. பிரதமைத்திதி காலை 8.56 மணி வரை பின்னர் துவிதீயை. நட்சத்திரம்: ரேவதி பி.இ. 1.54மணி வரை பின்னர் அசுவினி. மரணயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - பகல் 12.01 மணி முதல் 1.32 மணி வரை.

**சுபநேரம்** - மாலை 4.32 மணி முதல் 6.02 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - புரட்டாதி மாத தேய்பிறை துவிதீயை.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - ரேவதி.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** சலனம் மிகுந்த நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் குழப்ப நிலை உண்டாகும். பணிபுரியும் இடத்தில் கூடுதல் வேலை செய்ய வேண்டி வரும். முதலீடுகளைத் தள்ளிப் போடுவது நன்று.

**ரிஷபம்** நன்மையான நாள். பொருளாதாரம் வளர்ச்சி அடையும். பெண்களால் உதவியும், காரியனுகூலமும் கிட்டும். முக்கிய பிரமுகர்களின் சந்திப்பு நன்மையைத் தரும். மாணவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்துவார்கள்.

**மிதுனம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. எடுக்கும் முயற்சிகளில் வெற்றிக்கான பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டி இருக்கும். வருமானம் சுமாராக இருக்கும். தேவையற்ற வீண் செலவுகள் உண்டாகும்.

**கடகம்** யோகமான நாள். தனலாபம் பெருகும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். பணியில் இருந்து வந்த சுமைகள் குறைந்து பதவி உயர்வுகள் கிடைக்கும். சிலருக்கு புதிய வேலை வாய்ப்பக்கள் கிடைக்கும்.

**சிம்மம்** குழப்பமான நாள். வர வேண்டிய பணம் வரத் தாமதமாகும். மனதில் ஒரு வித சஞ்சல நிலை இருக்கும். பிள்ளைகளைப் பற்றி கவலை உண்டாகும். தொழிலில் கடின உழைப்பு, அலைச்சல் இருக்கும்.

**கன்னி** விருத்தியான நாள். பொருளாதாரம் மேம்படையும். குடும்ப உறவில் பாசமும், நேசமும் நிறைந்திருக்கும். வியாபாரம் நன்கு விருத்தி அடையும். மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி அடைவார்கள்.

**துலாம்** ஆக்கபூர்வமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். வெளி வட்டாரப் பழக்க வழக்கங்கள் நல்ல முன்னேற்றத்தைத் தரும். அரசாங்க உதவியும் அதிகாரிகள் நட்பும் கிடைக்கும்.

**விருச்சிகம்** அனுகூலமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். பணம் சரளமாகப் புழங்கும். குடும்பத்தில் ஒற்றுமை நிலை நீடிக்கும். அரசாங்க அனுகூலம் கிட்டும். பெண்கள் ஒத்துழைப்பு உதவிகரமாக இருக்கும்.

**தனுசு** துன்பமான நாள். வருமானம் பற்றாக்குறையாக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். உறவினர்களுடன் பகைமை உண்டாகும். தொழிலில் ஆர்வம் குறையும். வேலை செய்யும் இடங்களில் பல பிரச்சினைகள் உண்டாகும்.

**மகரம்** சம பலன்கள் காணப்படுகின்றன. உத்தியோகத்தர்களுக்கு செலவு சமமாக இருக்கும். குடும்ப அமைதி பேணப்படும். புதிய முயற்சிகளைத் தள்ளப் போடவும். வியாபாரம் ஏற்றமும், இறக்கமுமாக நடக்கும்.

**கும்பம்** யோகமான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமையுணர்வு அதிகரிக்கும். அசையாச் சொத்துக்கள் வாங்கும் யோகம் சிலருக்கு உண்டாகும். கொடுக்கல், வாங்கல் சுமுகமாக நடக்கும்.

**மீனம்** நன்மையான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். தொழிலில் இருந்து வந்த மந்த நிலை மாறும். சுபகாரியங்களில் கலந்து கொள்வார்கள். சகோதர உறவு பலப்படும்.

**சந்திராஷ்டம நாள்: மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# தமிழ்க் கூட்டமைப்பை வாக்குப்பெறும் இயந்திரமாக பயன்படுத்துதே தமிழரசுக் கட்சியின் விருப்பம்!

-எஸ்.நிதர்ஷன்-

தமிழ் தேசியக் கூட்டமைப்பை வெறுமனே தேர்தலில் வாக்குப் பெறுவதற்கான இயந்திரமாக மாத்திரம் பயன்படுத்தவே தமிழரசு கட்சி விரும்புவதாக தெரிவித்துள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ்பிறேமசந்திரன் அது கட்சியாக பதிவு செய்யப்படும் என முதல்வர் விக்னேஸ்வரன் எதிர்பார்ப்பது நடைபெற போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

வடக்குமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், தமிழ் தேசியக் கூட்டமைப்பு கட்சியாக பதிவு செய்யப்பட்டு அதன் தலைமை மாறினால் அதில் தாம் முதலமைச்சர் வேட்பாளராக மீளவும் களமிறங்க சந்தர்ப்பமுண்டு எனத் தெரிவித்திருந்தார்..இந்நிலையில் முதலமைச்சரது மேற்படி கருத்து தொடர்பாக சுரேஷ் பிறேமச்சந்திரனிடம் வினவிய போதே அவர் இதனை தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட மாட்டாது என்பதையே தமிழரசு கட்சியின் மாவை சேனாதிராசா உள்ளிட்ட அதன் தலைவர்கள் அழுத்தம் திருத்தமாக தொடர்ச்சியாக கூறி வருகின்றார்கள்.

இவ்வாறனநிலையில்தமிழ் தேசியக் கூட்டமைப்பை வெறுமனே நாடாளுமன்ற தேர்தல் காலத்தில் வாக்கு பெறுவதற்கான இயந்திரமாகவே தமிழரசுக் கட்சியினர் பயன்படுத்த விரும்புகின்றார்களே தவிர அதனை கட்சியாகக் பதிவு செய்ய அவர்கள் தயாராக இல்லை.

இந்நிலையில் முதலமைச்சர் கூறுவது போன்று அது கட்சியாக பதிவு செய்யப்படும் என எதிர்பார்ப்பது எப்போதும் நடைபெறப் போவதில்லை. அவ்வாறு கட்சியாக பதிவு செய்யதமிழரசுகட்சிஎப்போதுமே அனுமதிக்காது என்பதுவே நிதர்சனமாகும்.– என்றார் அவர் சொன்னார்.

வடக்குமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தலைமையில்பொதுவானஉடன்பாடு ஒன்றின் கீழ் தமிழ் தேசிய மக்கள்முன்னணியுடன்இணைந்து செயற்பட தாம் என்றும் தயாராகவே இருக்கின்றனள் என்றும் அவர் ...

தமிழர் தரப்பிலிருக்கின்ற இரு துருவங்களான கஜேந்திரகுமார் மற்றும் சுரேஷ் பிறேமச்சந்திரன் இருவரும் கொள்கையில் ஒன்றாகி மக்கள் நலனை முதன்மைபடுத்தினால் ஒன்று சேரலாம் என வடக்கு முதலமைச்சர் தெரிவித்திருந்த நிலையில் இது தொடர்பாக சுரேஷ் பிறேமசந்திரனிடம் வினவிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

சி.வீ.விக்னேஸ்வரன் தலைமையில் பொது உடன்பாடு கொண்டுவரப்பட்டால் அது தொடர்பாக தமிழ் தேசிய மக்கள்முன்னனியுடன்இணைந்து செயற்பட நாம் தயாராகவே இருக்கின்றோம். ஆனால் இது தொடர்பாக கஜேந்திரகுமாரே முடிவெடுக்க வேண்டும்.

விக்கினேஸ்வரன் பொதுவான கொள்கை ஒன்றை உருவாக்க வேண்டும். அவ்வாறு அவர் உருவாக்குகின்ற கொள்கையின் கீழ் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, கஜேந்திரகுமாருடன் இணைந்து செயற்பட நாம் தடையாக இருக்கமாட்டோம். இந்த விடயம் தொடர்பாகக் கஜேந்திரகுமாரும் இதே நிலைப்பாட்டிலேயே இருப்பார் என்றே நாம் கருதுகின்றோம்.– என்றார்.

(உ–07)

# திருக்கோவிலில் தியாகி திலீபனின் 31ஆவது ஆண்டு நினைவேந்தல்!

அம்பாறை, செப்.26

அம்பாறை மாவட்டத்தில் புலனாய்வுத்துறையினரின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் திருக்கோவிலில் தியாகி திலீபனின் 31ஆவது ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இந்த நினைவேந்தல் அனுஷ்டிப்பானது அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின்உறவுகளின் சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி தலைமையில் திருக்கோவில் 03 இல் அமைந்துள்ள அத்தியடிப்பிள்ளையார் ஆலயத்தில் பொங்கல் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

பின்னர் ஆலயத்தில் இருந்து திலீபனின் உருவப் படத்தை தாங்கியவாறு அருகில் அமைந்துள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க அலுவலகம் வரை சென்று அங்கு திலீபனின் உருவப்படத்திற்கு தீபச் சுடர் ஏற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நினைவேந்தல் ஏற்பாடுகள் புலனாய்வுத் துறையினரின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் நடைபெற்றிருந்தன. திருக்கோவில் சகலகலை அம்மன் ஆலயத்தில் இந் நினைவேந்தல் ஏற்பாடுகளை மேற்கொள்ள முதலில் திட்டமிடப்பட்டிருந்தது.

மேலும், அச்சமயம் அங்கு புலனாய்வுத் துறையினர் சென்று பூசகரை பூஜை செய்ய வேண்டாம் என்றும் அவ்வாறு செய்தால்ஏற்பாட்டாள்சங்கத்தலைவியையும், பூசகரையும் கைது செய்வோம் எனஅச்சுறுத்தப்பட்டதார் என சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## வழக்கு தவணைகளுக்குச் செல்லாது தலைமறைவாக இருந்த நபர் கைது!

திருகோணமலையில் சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக ஆஸ்திரேலியாவுக்கு ஆள்களை அனுப்பியமை தொடர்பாக நடைபெற்று வந்த வழக்குத் தவணைகளுக்கு செல்லாது தலைமறைவாக இருந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபரை நேற்று அதிகாலை கைது செய்துள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அலஸ்தோட்ட பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் கடந்த 2012ஆம் ஆண்டு காலப் பகுதியில் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு ஆட்களை அனுப்பிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, பொலிஸாரினால் சந்தேகநபருக்கெதிராக வழக்கு தொடரப்பட்ட போதும் அவர் வழக்கு தவணைகளுக்கு செல்லாது தலைமறைவாக இருந்து வந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், சந்தேகநபரை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகிளோம் என்றும், திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளோம் என்றும்பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## நீர்க்காகம் இறுதிக்கட்டப் போர் ஒத்திகை இன்று குச்சவெளிக் கடற்கரையில்!

இலங்கை இராணுவத்தின் ஏற்பாட்டில், முப்படைகளும், வெளிநாட்டுப் படையினரும் இணைந்து பங்கேற்று வரும், நீர்க்காகம் கூட்டுப் பயிற்சியின் இறுதித் தாக்குதல் ஒத்திகை இன்று திருகோணமலை குச்சவெளி கடற்கரையில் இடம்பெறவுள்ளது.

கடந்த 6ஆம் திகதி ஆரம்பமாகிய நீர்க்காகம் கூட்டுப் பயிற்சி இன்று நிறைவடையவுள்ளது.

இன்று குச்சவெளியில் நடக்கவுள்ள இறுதிக்கட்ட தாக்குதல் ஒத்திகையில், சிறிலங்காவின் 2500 இராணுவத்தினர், 400 கடற்படையினர், 200 விமானப்படையினரும், பங்களாதேஷ். சீனா, இந்தோனேசியா, நேபாளம், நைஜீரியா, பாகிஸ்தான், சூடான், துருக்கி, சாம்பியா, ஆகிய நாடுகளின் படையினரும் பங்கேற்கவுள்ளனர்.

சிறப்பு நடவடிக்கைப் படைகளின் போரிடும் திறனை உயர்த்தும் வகையில் இந்தப் பயிற்சி இடம்பெறும் என்று, மேஜர் ஜெனரல் நிசங்க ரணவான தெரிவித்தார்.

இதற்கிடையே குச்சவெளியில் இன்று மேற்கொள்ளப்படவுள்ள இறுதிக்கட்ட தாக்குதல் ஒத்திகைக்கான முன்னேற்பாடுகள் குறித்து இந்த இராணுவத் தளபதி ஆராய்ந்துள்ளார்.

# 'பட்ஜெட்' மூலம் சிறு கைத்தொழில் முன்னேற்றத்திற்கென கூட்டுறவு திணைக்களத்திற்கு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு!

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. தெரிவிப்பு



மன்னார், செப்.26

2018 ஆம் ஆண்டின் வரவு – செலவு திட்டத்தில் சிறு கைத் தொழில் முன்னேற்றத்திற்கென கூட்டுறவுத் திணைக்களத்திற்கு 100 கோடி ரூபா நிதி ஒதுக்கப் பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர்சாள்ஸ்நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன்எதிர்வரும்டிசெம்பர் மாதத்திற்கு முன்பு சிறு கைத் தொழில் முன்னேற்றத்திற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பேசாலை – மன்னார் மேற்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

வருட இறுதிக்குள் ஆரம்பிக்க வேண்டிய வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படா விட்டால் அந்த நிதி இல்லாமல் திரும்பிப் போய் விடும். இதுதான் இலங்கையில் இருக்கின்ற வரவு செலவுத் திட்ட நடைமுறையாகும். அபிவிருத்திகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டு அந்த நிதி மக்களால் அல்லது அந்த திணைக்களத்தால் பயன்படுத்த அல்லது நடைமுறைப் படுத்தப் படாவிட்டால் அந்த நிதி மீளவும் அரசிடம் சென்று விடும்.

அதற்கு அரசை குறை சொல்லி பிரயோசனம் இல்லை. ஏனெனில், சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் அதற்குரிய முன்மொழிவை கொடுத்து அந்தப் பணத்தை பெற்றுக் கொள்வதற்குரிய வழிவகைகளைச் செய்ய வேண்டும்.

அந்த வகையில் நூறு கோடி ரூபா வட மாகாண கூட்டுறவு திணைக்களத்திற்கு வழங்கப் பட்டது. அதை மக்கள் பயன்படும் வண்ணம் செயற்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி வேட்பாளர் யார்? மஹிந்தவே இறுதி முடிவு!

## ஜீ.எல். பீரிஸ் கூறுகிறார்



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள பொது வேட்பாளர் யார்? என்ற இறுதி முடிவை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே தீர்மானிப்பார் என ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவின் தலைவர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

ஜனாதிபதி தேர்தலுக்கு 14 மாதங்களே இருக்கின்றன. ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ யாரை பரிந்துரை செய்கின்றாரோ அவரை நாம் ஏற்றுக்கொள்வோம்.

கட்சிக்குள் எந்த பிளவும் இல்லை. எனினும் இறுதி வேட்பாளர் யார் என அறிவிக்கும் வரை கட்சியில் உள்ளவர்கள் அவரவருக்கு விருப்பமான வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிப்பார்கள்.

அதே சமயம் எமது அணியில் உள்ள அங்கத்துவ கட்சி தலைவர்கள் இடையே எவ்வித முரண்பாடுகளும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சினைப்பர் துப்பாக்கி காணாமற்போனது ஆபத்தான விடயம் என்கிறார் மஹிந்த!



கொழும்பு, செப்.26

பொலிஸ் திணைக்களத்திற்குச் சொந்தமான சினைப்பர் ரக துப்பாக்கி காணாமல்போயுள்ளமை பாரதூரமான விடயம் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சினைப்பர் துப்பாக்கிகள் போன்ற ஆயுதங்கள் காணாமல்போனால் அது பெரும் கவலையை ஏற்படுத்தக் கூடிய விடயம் எனவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

காணாமற்போன துப்பாக்கியை யார் யாருக்கு எதிராக பயன்படுத்தப்போகின்றார்கள் என எவருக்கும் தெரியாது.

ஜனாதிபதியையும் முன்னாள் பாதுகாப்பு செயலாளரையும் கொலை செய்வதற்கான முயற்சிகள் இடம் பெற்றுள்ளன என வெளியாகியுள்ள செய்திகளைக் கருத்தில் கொள்ளும் போது சினைப்பர் துப்பாக்கி காணாமற்போயுள்ளமை ஆபத்தான விடயம். முக்கிய நபர்களைக் கொலை செய்வதற்கான சதி இடம்பெற்றமைக்கான ஆதாரங்கள் உள்ளபோதிலும் ஏன் சந்தேகநபர்கள் கைது செய்யப்படவில்லை.?

பாதாள உலகத்தினர் தென்பகுதியில் மாத்திரம் செயற்படவில்லை நாடு முழுவதிலும் அவர்களின் செயற்பாடுகள் காணப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பக்தி கானங்கள்

மட்டக்களப்பு கொக்கட்டிசோலை 'தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 6 மணியளவில் நடைபெறவுள்ள சப்பை ரத திருவிழாவில் கலாபூஷணம் க.லோகேஸ்வரனின் பக்தி கானங்கள் பக்க வாத்திய சகிதம் ஆலய பிரதான மண்டபத்தில் இடம்பெறும். (இ)

# வெளிநாட்டு பெண் உட்பட இருவர் திருகோணமலை விபத்தில் படுகாயம்!

திருகோணமலையில்ஏற்பட்ட விபத்தில்வெளிநாட்டு பெண்ணொருவர் உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை அலஸ் தோட்டம் பகுதியில் இடம்பெற்றுள்ள நிலையில் படுகாயமடைந்த இருவரும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நிலாவெளி பகுதியிலிருந்து திருகோணமலை நகருக்கு வந்து கொண்டிருந்த மோட்டார்சைக்கிளுடன், மற்றுமொரு மோட்டார்சைக்கிள் மோதியதாலேயே விபத்து ஏற்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிலொரு மோட்டார்சைக்கிளை அமெரிக்கா நாட்டைச் சேர்ந்த இளைஞன் செலுத்தி வந்த நிலையில் பின்னால் அமர்ந்திருந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜெசிக்கா லூசியா (28 வயது) எனும் யுவதியே படுகாயமடைந்துள்ளார்.

இதேவேளை விபத்தில் திருகோணமலை ஜமாலியா பகுதியைச் சேர்ந்த 30 வயது இளைஞரொருவரும் படுகாயமடைந்துள்ளார்.

# கூட்டு எதிர்க் கட்சியினர் கோட்டாவை கொலை செய்யச் சதி செய்யவில்லை!

## குமார வெல்கம எம்.பி.கூறுகிறார்



ஜனாதிபதியையும் கோட்டாபயராஜபக்ஷவையும்கொலை செய்ய கூட்டு எதிர்க் கட்சியினர் சதி செய்யவில்லை. அவ்வாறு செய்யக்கூடிய யாரும் கூட்டு எதிர்க் கட்சியில் இல்லையென களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

நான் குடும்ப அரசியலை விரும்பவில்லை. ராஜபக்ஷ ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேண்டுமென்றால் அது மஹிந்த ராஜபக்ஷவாகவே இருக்கவேண்டும். நான் அவரைத் தான் விரும்புகின்றேன். ஏனென்றால் நாட்டு மக்களும் அவரையே விரும்புகின்றார்கள்.

களுத்துறை மாவட்ட உள்ளூராட்சி சபை பிரதிநிதிகள் மற்றும் கட்சி செயற்பாட்டாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

# வெற்றிலையின் விலை அதிகரிப்பு

உற்பத்திவிலைஅதிகரிப்பின் காரணமாக வெற்றிலையின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப் படவுள்ளது என தெரிவிக்கப் படுகிறது.

இதற்கமைய 30 ரூபாய்க்கு விற்கப்படும் 'வெற்றிலை கூறு' 40 ரூபாக்கு விற்பனை செய்வதற்கு, விற்பனையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

வெற்றிலைக்கான உற்பத்தி செலவு அதிகரிப்பு காரணமாக, வெற்றிலையை குறைந்த விலைக்கு விற்பதால், அதிகம் நட்டம் ஏற்படுவதை கருத்திற் கொண்டே வெற்றிலையின் விலையை அதிகரிக்கத் தீர்மானித்ததாகவும் வெற்றிலை உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# பிணையில் விடுதலையானார் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நியோமல்!



கொழும்பு, செப்.26

கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் நியோமல் ரங்கஜீவவைநீதிமன்றம் பிணையில் விடுதலை செய்துள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலையின் 27 கைதிகள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த, பொலிஸ் போதை பொருள் ஒழிப்புப் பணியகத்தின் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நியோமல் ரங்கஜீவவே பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்றம் ரங்கஜீவவுக்கு பிணை வழங்கியுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் கைதிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தையடுத்து கைதுசெய்யப்பட்ட நியோமல் ரங்கஜீவ மற்றும் எமில் ரஞ்ஜன் ஆகியோர் இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உண்மையான நல்லிணக்கம் இதுவரையிலும் இல்லை!

## அரசியல் கைதிகளை விடுவித்து அதை வெளிப்படுத்துங்கள்!

■ அருண் ஆரோக்கியநாதன்



பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு இருக்கும் கைதிகளில் சிலர் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டம் இன்றுடன் பதினொராம் நாளாக தொடர்ந்துகொண்டிருக்கின்றது.

யுத்தம் முடிவுற்று 09 வருடங்கள் கடந்த பின்னரும் சிறையில் தாங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம் எனவும் தமது வழக்கு விசாரணைகள் திட்டமிட்டு காலம் தாழ்த்தப்படுகிறது எனவும் குற்றம் சாட்டியுள்ள இந்தக் கைதிகள் இ தமக்கு குறுகிய காலம் புனர்வாழ்வளித்து விடுவிக்குமாறு கோரி உண்ண ாவிரதத்தை மேற்கொண்டுள்ளனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த கைதிகளில் ஒருவரின் உடல்நிலை பலவீனமடைந்தமையைத் தொடர்ந்து அக்கைதி உடனடியாக வெலிக்கடைச் சிறைச்சாலை வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.சுமந்திரன் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள இந்தக் கைதிகளை கடந்த ஞாயிறன்று நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இவ்வாறான சூழலில் நல்லாட்சி அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளிலொன்றாக விளங்கும் ஜாதிக ஹெல உறுமயவின் முக்கிய தலைவர்களில் ஒருவரும் பெருநகரங்கள் மற்றும் மேல் மகாகாண அபிவிருத்தி அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க கட்சியின் தலைமையகத்தில் கடந்த வாரம் விசேட செய்தியாளர் மாநாடொன்றை நடத்தினார்.

அந்தச் செய்தியாளர் மாநாட்டில் 'நீண்ட காலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் புலிகள் இயக்கத்தினரின் முன்னாள் உறுப்பினர்களை பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்க வேண்டும்' என்று ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றார் அவர்.

அதேநேரம் 'யுத்தம் முடிவுக்கு வந்து 09 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் பயங்கரவாத பிரச்சினையைக் காட்சிப்படுத்தி அரசியல் செய்யவோ இனவாதத்தைத் தூண்டிக் கொண்டு செயற்படவோ இனியும் இடமளிக்கக் கூடாது. எமக்கு நல்லிணக்கம் தொடர்பில் முன்னுதாரணம் வழங்குகின்ற தென்னாபிரிக்கா, கொலம்பியா உள்ளிட்ட நாடுகளின் நல்லிணக்க பொறிமுறையின் பிரதான அம்சமே பொதுமன்னிப்புத்தான். இதனை இலங்கை விடயத்திலும் கையாள வேண்டும்' என்றும் வலியுறுத்தி இருக்கின்றார் அமைச்சர்.

> இலங்கை இன முரண்பாடு நிலவிய ஒரு நாடு என்ற பார்வை சர்வதேசத்தில் உள்ளது. அப்பார்வையின் விளைவாக இந்நாடு பல்வேறு அழுத்தங்களுக்கு கடந்த ஆட்சிக் காலத்தில் முகம் கொடுத்தது. இருந்தும் அவற்றைக் கடந்த கால ஆட்சியாளர்கள் கருத்தில் கொள்ளாது செயற்பட்டனர். அதன் விளைவாக நாடே பாதிப்புகளுக்கு முகம் கொடுத்தது..

நாட்டை நிலைபேறான அபிவிருத்திப் பாதையில் இட்டுச் சென்றிருக்கும் நல்லாட்சி அரசாங்கம் நாட்டில் சகவாழ்வையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளையும் பரந்த அடிப்படையில் முன்னெடுத்துள்ளது. அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் நாளுக்குநாள் நம்பிக்கையையும் புதிய எதிர்பார்ப்புகளையும் ஏற்படுத்தி வருகின்றன.

என்றாலும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர்கள் யுத்தம் முடிவுற்று 09 வருடங்கள் கடந்த பின்னரும் தடுப்புக் காவலில் இருப்பது அரசாங்கம் முன்னெடுத்து வரும் சகவாழ்வு மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்தக் கூடியதாக அமையலாம்.

ஆனால் அவர்களது வழக்கு விசாரணைகளை விரைவுபடுத்தி அவர்களுக்கு புனர்வாழ்வளித்து பொது மன்னிப்பு வழங்குவது நல்லிணக்க வேலைத் திட்டங்களுக்கு உத்வேகம் அளித்து வலுப்படுத்தக் கூடியதாக அமையும். அத்தோடு மக்கள் மத்தியில் நிலவும் சந்தேகங்களைக் களைந்து நம்பிக்கைகளை மேலும் வளர்க்கவும் வழிவகுக்கும். இதுவும் சகவாழ்வும் நல்லிணக்கமும் தழைத்தோங்கப் பக்க துணையாக அமையும்.

மேலும் இலங்கை இன முரண்பாடு நிலவிய ஒரு நாடு என்ற பார்வை சர்வதேசத்தில் உள்ளது. அப்பார்வையின் விளைவாக இந்நாடு பல்வேறு அழுத்தங்களுக்கு கடந்த ஆட்சிக்காலத்தில் முகம் கொடுத்தது. இருந்தும் அவற்றைக் கடந்த கால ஆட்சியாளர்கள் கருத்தில் கொள்ளாது செயற்பட்டனர். அதன் விளைவாக நாடே பாதிப்புகளுக்கு முகம் கொடுத்தது..

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு யுத்தம் முடிவுற்ற 09 வருடங்கள் கடந்த பின்னரும் சிறைச்சாலையில் தடுத்து வைத்திருக்கின்றமை நல்லாட்சி அரசாங்கத்திற்கு கிடைக்கப் பெற்று வரும் ஆதரவு மற்றும் நல்லபிமானத்தில் தாக்கம் செலுத்தக் கூடியதாக அமையலாம்.

மேலும் இந்த நாடு தொடர்ந்தும் வளர்முக நாடாகவோ மூன்றாம் மண்டல நாடாகவோ இருக்க முடியாது என்ற நல்ல நோக்கில்தான் நல்லாட்சி அரசாங்கம் நாட்டை நிலைபேறான அபிவிருத்திப் பாதையில் இட்டுச் சென்றுள்ளது. இந்த அபிவிருத்திப் பாதையில் இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் சகலரும் இலங்கையர் என்ற அடையாளத்துடன் ஒன்றாகப் பயணிப்பது அவசியம்.

ஆகவே அமைச்சர் சம்பிக்க ரணவக்க முன்வைத்திருக்கும் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்தப்படுவது மிகவும் அவசியமானது. அவரது யோசனைகள் குறித்து கவனம்செலுத்தும் போது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் முன்வைத்த விடயங்களையும் கவனத்திற்கொள்ளவேண்டும். போர்க்குற்றம் சாட்டப்பட்ட படையினரையும் அரசியல் கைதிகளையும் ஒரே தராசில் வைத்து பார்க்க முடியாது. போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பில் முதலில் உண்மை கண்டறியப்பட்டபின்னரே அவர்கள் விடயத்தில் என்ன செய்யவேண்டும் என தீர்மானிக்கவேண்டும். *

# பரந்தன் புதிய பஸ் நிலையத்துக்கான அடிக்கல் நடுகை











கிளிநொச்சி பரந்தன் நகரத்துக்கான புதிய பஸ் நிலையத்தை நிர்மாணிக்கும் பணிகள் நேற்று ஆரம்பமாகின. கரைச்சி பிரதேச சபை ஆளுகைக் குட்பட்ட பரந்தன் பஸ் நிலையத்தை நவீனமயமாக் கி உருவாக்கும் முடிவுக்கு அமைய மாகாணத்தினுடைய குறித்தொதுக்கப்பட்ட நிதி பெறப்பட்டு வீதி அபிவிருத்தி திணைக்களத்தினுடைய பஸ் நிலைய வடிவமைப்புடன் அப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன சுமார் 40 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட இருக்கிற இந்த பஸ் நிலையத்துக்கான அடிக்கல் நேற்று நண்பகல் 12.00 மணியளவில் நட்டு வைக்கப்பட்டது.

தொடர்ந்து பஸ் நிலையத்தை சூழ்ந்துள்ள பகுதிகளை நவீனமயப்படுத்தப்படுவதுடன் பொது மலசலகூடம் நிர்மாணிப்பதற்கான வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது

முல்லைத்தீவு, பூநகரி, மன்னர், யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் இருந்து வருகின்ற ஏராளமான மக்கள் தரித்து செல்லுகின்ற கேந்திரஸ்தானமாக இருந்து வருகிறது பரந்தன். எனவே இந்த பஸ் நிலையத்தை நவீன மயப்படுத்த வேண்டும் என கரைச்சி பிரதேச சபை மாகாண முதலமைச்சருக்கு கொடுத்த கோரிக்கைக்கு அமைய வீதி அபிவிருத்தி சபையினுடைய வடிவமைப்பு மற்றும் அனுசரணையுடன் இந்தப் பணிகள் நேற்று ஆரம்பமாகின. இந் நிகழ்வில் வட மாகாணசபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிகிதன், உப தவிசாளர், உறுப்பினர்கள், அப் பிரதேச அமைப்பினர் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மதியுரைஞர் அன்டன் பால சிங்கத்தின் பாரியார் அடேல் பால சிங்கத்தின் 'சுதந்திர வேட்கை' நூலில் இருந்து பெறப்பட்ட ஒரு பகுதியே இங்கு திலீபனின் நினைவுக் குறிப்பாக வெளியாகியுள்ளது.

# தம்பி திலீபன் மரணிக்கவில்லை:

# இன்றும் எம்முடன் வாழ்கிறான் அவன்!



திலீபன் எனும் பெயரில் அறியப்படும் பார்த்திபன் இராசையா (நவம்பர் 29, 1963 – செப்டெம்பர் 26, 1987) தமிழீழ விடுதலைப் புலிகளின் ஓர் ஆரம்பக்கால உறுப்பினர். யாழ்ப்பாணம், ஊரெழு எனும் ஊரைச் சேர்ந்த இவரின் மறைவின் பின்னர் புலிகள் அமைப்பில் லெப்டினன் கேணல் திலீபன் எனும் நிலை வழங்கப்பட்டது. இந்திய அமைதிப் படையினரிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து காந்திய வழியில் நீரும் அருந்தாமல் உண்ணாவிரதம் இருந்து, அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் அவர் உறுதியுடன் அவ் உண்ணாவிரதத்தில் உயிர் துறந்தவர். 1987 செப்டெம்பர் 15ஆம் திகதி ஐந்து அம்சக் கோரிக் கையை முன்வைத்து உண்ணா விரதத்தை ஆரம்பித்தார். 1987ஆம் ஆண்டு செப்டெம்பர் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.48 மணிக்கு லெப்டினன் கேணலாக, யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபன் மரணம் எய்தினார். ஈழத் தமிழரின் நெஞ்சங்களில் வீற்றிருக்கும் தியாகதீபம் திலீபனின் 31 ஆம் ஆண்டு சினைவு நாள் நினைவேந்தல் இறுதி நாள் நிகழ்வுகள் இன்றாகும். தமிழ்த் தேசமெங்கும் இன்று திலீபனின் நினைவாக பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன. புலம் பெயர் நாடுகளிலும் தியாகச் செம்மலின் நினைவு நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இறுதி நாளான இன்றும் புலம் பெயர் மக்களினால் எழுச்சி மிகு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

திலீபன் என்ற இளம் புலித் தலைவன் நல்லூர்க் கந்தசாமி கோவில் முன்றிலில் செப்ரெம்பர் 14 இல் இருந்து சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். இந்தியா தனது உறுதிமொழியை நிறைவேற்றத் தவறியதைச் சுட்டிக்காட்டும் வகையிலும், தமிழ் மக்களின் ஆற்றாமை உணர்வை, தேசிய மக்கள் எழுச்சியாக ஒன்று திரட்டும் வகையிலும் திலீபன் உண்ணா மறியல் அமைந்தது. அவருடைய இந்த சாத்வீக போராட்டம் தனித்துவம் வாய்ந்தது.

ஆயுதப் போராளியான திலீபன், மாபெரும் இந்தியத் தலைவரான மகாத்மா காந்தியால் உலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஆன்மிகப் பண்பு கொண்ட அகிம்சைவழியைக்கையாண்டு, தமிழ் ஈழ மக்களின் இக்கட்டான நிலையை இந்தியாமக்களுக்குஉணர்த்த முனைந்தார். தமிழ் மக்களும் சரி, விடுதலைப் புலிகளும் சரி, தமது விடுதலைக்காக எந்த எல்லைக்கும் செல்லத் தயாராக இருக்கின்றார்கள் என்பது, விடுதலை மட்டில் அவர்கள் கொண்டிருக்கும் ஆழமான பற்றாகப் பிரதிபலிக்கின்றது.; அவர்கள் மீதான ஒடுக்குமுறையின் சகிக்க முடியாத ஆழத்தையும் அது பிரதிபலிக்கின்றது.

இத்தகைய தாங்க முடியாத ஒடுக்குமுறைக்கு உள்ளாகி இருப்பவர்களும், இன அழிப்புக்கு உள்ளானவர்கள் மட்டுமே தமது இனத்தின் சுபீட்சத்துக்காகத் தம்மையே பலியாக அர்ப்பணிக்கத் தயங்க மாட்டார்கள் என்பது, திலீபன் என்ற அத்தியாயம் புகட்டும் ஒரு வரலாற்றுப் பாடமாகும்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னதாக, பிரபாகரன் அவர்களுடைய அணியில் ஒருவராகத் திலீபனும் புதுடில்லி சென்றிருந்தார். அங்கே இந்தியப் பிரதமருக்கும் விடுதலைப் புலிகளின் தலைவருக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் உள்ளடக்கம் திலீபனுக்கும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ராஜீவ் காந்திக்கும் பிரபாகரனுக்கு இடையே எழுதப்படாத ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டதை திலீபன் அறிந்திருந்தார். அது நிறைவேற்றப்படாது போனதைக் கண்டதும், தமது மக்களும் தமது போராட்டமும் ஏமாற்றப்பட்டு விட்டதாக திலீபன் கருதினார்.

எனவே அந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கோரிக்கையோடு சாகும் வரை உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட அவர் முடிவு செய்தார். திலீபனின் இந்த உண்ணா விரதம் பற்றிய செய்தியும் விடுதலைப் புலிகளுக்கும் அமைதிப் படைக்கம் இடையே அரசியல் உறவு சீர்குலைந்து போகும் செய்தியும் எமது செவிகளை எட்டியதும் இந்தியாவை விட்டு யாழ்ப்பாணம் புறப்படத் தீர்மாணித்தோம். இந்தியா – இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானதை அடுத்து சென்னையில் இருந்து சில விமானப் பயண வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. நாடு கடத்தப்பட்டு இந்தியாவில் வாழ்ந்து கொண்டிருந்த சில ஈழத் தமிழ் பிரமுகர்கள், வடக்கு – கிழக்கில் உள்ள தங்கள் இல்லங்களுக்குத் திரம்ப. இந்த விமானப் பயண ஏற்பாடுகளை இந்திய அதிகாரிகள் செய்திருந்தார்கள்.

ஆனால் இந்த வாய்ப்பைப் பயன்படுத்த நான் விரும்பவில்லை. கடந்த சில ஆண்டுகளாக எம்மைச் சந்திக்கச் சென்னைக்கு வந்த பல போராளிகள் பாக்கு நீரிணையை படகிலே கடந்து செல்லும் போது தாம் எதிர்கொள்ளும் ஆபத்துக்கள், இடர்பாடுகள் பற்றி நிறையக் கூறியிருந்தார்கள். அந்த இடர்பாடுகளுக்கு முகம் கொடுக்க நாம் ஏன் தயங்க வேண்டும் என்ற கேள்வி என்னுள் எழுந்தது. அடிக்கடி சீர் மாறும் பாக்கு



நீரிணையை கடக்க நாம் புறப்பட்ட அன்று விண்மீன் நிறைந்த நிர்மலமான வானமும், அமைதியான பளிங்கு போன்ற கடலும் இதமான கால நிலையும், எமக்கு சாதகமாக அமைந்தன. குறுகிய கடற்பயணம் ஆபத்து எதுவும் கிடையாது. மகிழ்ச்சியான பயணமாக அமைந்தது.

1987 செப்ரெம்பரில் இருளின் போர்வையில், பாக்கு நீரிணையைக் கடந்து, வல்வெட்டித்துறை வெண்மணற் கடற்பரப்பில் கால் பதித்த போது, எனது நீண்ட கால வேணவா ஒன்று நிறைவேறியது. ஆனாலும் போராட்டத்துக்கு இத்தனை காலமாக வழங்கிய ஆதரவை அடுத்து, தமிழீழக் கரையை அடைந்தது மகிழ்ச்சியைத் தர வேண்டும் என்ற போதிலும், யாழ். மண்ணில் நிலவிய துயர நிலை அந்த மகிழ்ச்சியின் இனிமையைக் கட்டுப்படுத்தியது. சாகும் வரையிலான உண்ணா விரதத்தை திலீபன் தொடங்கி சில நாள்களே கழிந்து இருந்தன. யாழ்ப்பாணத் தீபகற்ப மக்கள் இதனால் கவலையோடு இருந்தார்கள்.

ஆனாலும், உலகின் மிகப் பெரிய மக்கள் ஆட்சி நடைபெறும் நாட்டிடம் இருந்து நீதி கேட்டு தனியொரு மனிதன் நடத்தும் இந்த அகிம்சைப் போராட்டத்தை அவர்கள் முழுமையாக ஆதரித்தார்கள். தீபகற்பத்தை நாம் சென்றடைந்த பின் எமது முதல் முக்கியப் பணிகளில் ஒன்றாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றிலில் திலீபனைப் பார்க்கச் சென்றோம்.

யாழ்ப்பாணம் தமிழ் மக்களின் பண்பாட்டு மையம் நல்லூர் கந்தசுவாமி கோவில். அவர்களுடைய ஆன்மிக மையமும் அது தான். ஸ்ரீலங்கா அரச ஒடுக்கு முறையை எதிர்க்க விடுதலைப் புலிப் போராளியாக முகிழ்த்த திலீபன், இந்தியா அரசின் கபடத்தனத்தை தோலுரித்துக் காட்டத் தனி ஒருவராக புறப்பட்டிருந்தமை, அவருடைய போராட்ட இயல்பின் தன்மையைக் காட்டியது. கிட்டு காலத்தில் யாழ்ப்பாணத்தின் பாதுகாப்புக்காக பல தடவைகளில் அவர் ஆயுதச் சமரில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது அவரின் வயிற்றில் பலத்த காயம் ஏற்பட்டது. தமது மக்களின் அரசியலையும் மனோபாவத்தையும் மிகத் தெளிவாக திலீபன் புரிந்து வைத்திருந்தார். தேசியப் போராட்டத்தில் பெண்களும் இணைக்கப்பட வேண்டும் என்பதை பலமாக ஆதரித்து வந்தார் என்று விடுதலைப் புலிகளின் மூத்த பெண் போராளிகள் அடிக்கடி குறிப்பிடுவார்கள். பெண்கள் நிலையை உயர்த்தும் முயற்சியில் பிதாமகர்களில் ஒருவராகத் திலீபன் மதிக்கப்பட்டார். இத்தகைய வரலாறு உடைய ஒருவர் போராளிகளோடு மட்டுமல்ல யாழ்ப்பாணப் பொது மக்களோடும் நன்றாக ஒட்டிக் கொண்டார் என்பது வியப்பல்ல.

ஒப்பந்தத்துக்கு முந்திய பேச்சுவார்த்தைக் கால கட்டத்திலேயே திலீபனை பாலா சந்தித்தார். புதுடில்லியில் ஒரே அறையில் இரண்டு பேரும் தங்கினார்கள். ஒட்டிக் கொள்ளும் இந்த இளைஞனை பாலாவுக்கு மிகவும் வெகுவாகப் பிடித்தது. இப்போது யாழ்ப்பாணத்திலே மிக முரண்பாடான ஒரு சூழலிலே, அதுவும் திலீபனின் உயிர் ஒடுங்கிக் கொண்டிருக்கும் கட்டத்தில் அவரைச் சந்திப்பது பாலாவுக்கு ஆற்றொணாத் துயர் தரும் ஒரு சந்திப்பாக இருந்தது.

திலீபனின் உண்ணாவிரதப் போராட்டமானது ஒரு பொது நலனுக்காக தனியொருவன் தன்னை உதிர்க்கும் ஒப்பற்ற


> 'எமது மண்ணில் விடுதலைக்காக யார் போராடுகிறார்களோ அவர்களே இந்த மண்ணின் மைந்தர்கள். எமது உரிமைகளை நாமே வென்றெடுக்க வேண்டும். இதற்கு வேறு யாருடைய தயவையும் எதிர்பார்க்கக் கூடாது. நான் ஆத்மரீதியாக உணர்கிறேன். இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் எமது மக்கள் நிச்சயமாக விடுதலையடைவார்கள்."
>
> – திலீபன்

தியாகம். மற்றவர்கள் சுதந்திரமாகவும் கண்ணியத்தோடும் வாழ வேண்டும் என்பதற்காக வீரம் மிக்க ஓர் இளைஞன் தனக்குத்தானே மரண தண்டனை வழங்கும் உயர் கொடை; தன்னைத்தானே சிலுவையில் அறைந்த ஒப்பற்ற அர்ப்பணிப்பு. ஆழ்ந்த மரியாதையோடும் பணிவோடும் பாலாவும் நானும் மேடை மீது ஏறி, உறை நிலையிலிருந்த திலீபனோடு பேசச் சென்றோம்.

ஏற்கனவே பல நாள்களாக நீரோ, உணவோ ஏற்காததால், உலர்ந்து வெடித்த உதடுகளோடு காணப்பட்ட திலீபனால் முணுமுணுக்கவே முடிந்தது. களையிழந்த திலீபனுடன் பேச பாலா குனிந்தார். ஓரிரு வார்த்தைகள் பேசினார்கள். எதிர்பார்த்தது போல, அரசியல் நிலைவரம் பற்றியே திலீபன் விசாரித்தான். விரைவிலேயே அங்கிருந்து அகன்றோம். அதன் பின் அந்த உன்னதத் தியாகியை நாம் உயிரோடு பார்க்கவில்லை. *

# விநோத மீன்கள்!





கடல் மீன்கள் என்னென்ன உள்ளன? இப்படிக் கேட்டால் நாம் சாப்பிடும் வஞ்சிரம், வாவல், சங்கரா மீன்களின் பெயர்களைச் சொல்லிவிடுவீர்கள். கடலில் இந்த வகை மட்டுமல்ல; ஏராளமான மீன் வகைகள் உள்ளன. இதுவரை நீங்கள் அறிந்திராத சில மீன்களைப் பார்ப்போமா?

**விரியன் மீன்**

விரியன் மீனைக் (viper fish) கொலைகார மீன் என்று சொல்வார்கள். அந்த அளவுக்கு மிகவும் மூர்க்கமாக இருக்கும் இந்த மீன். ஆனால், இந்த மீன் இரண்டு அடி நீளம் வரைதான் வளரும். பெரிய கண்களும் ஊசி போன்ற கூர்மையான பற்களும் இந்த மீனுக்கு உண்டு. பிறந்தது முதல் இறக்கும் வரை வாயைத்திறந்தபடியே வைத்திருக்கும். வாயை மூட முடியாத அளவுக்கு இதன் பற்கள் மிக நீள மானவை. சாப்பிடாமல் நீண்ட நாள்கள் உயிர் வாழக் கூடிய ஆற்றல் இந்த மீனுக்கு உண்டு.

**சவப்பெட்டி மீன்**

சவப்பெட்டி மீன்கள் (coffin fish) தெற்கு ஆஸ்திரேலியா, டாஸ்மேனியா கடற்கரையோரங்க ளில் அதிகம் காணப்படுகின்றன. இந்த மீன்கள் 15 செ.மீ. வரை வளரும். அதாவது அரை அடி ஸ்கேல் அளவுக்கு இருக்கும். சிறிய கால்கள் போல் காட்சி யளிக்கும் துடுப்புகளைக் கொண்டு தரையில் நடந்து செல்லும் இந்த மீன். இதை 'கை மீன்' (hand fish) என்றும் சொல்வதுண்டு. எதிரி தாக்க வந்தால், அவசர அவசரமாக நிறைய தண்ணீரைக் குடித்து, உடலை உப்பச்செய்துவிடும். இதன் உப்பிய உடலை எதிரியால் கடிக்கக்கூட முடியாது.

**நீல வளைய ஒக்டோபஸ்**

கடல்வாழ் உயிரினங்களில் அதிக விஷம் கொண்ட மீன் நீல வளைய ஒக்டோபஸ்தான் (Blue ringed octopus). ஒரு கோல்ஃப் பந்து அளவே இந்த மீன் இருக்கும். நீளம் 58 அங்குலம் மட்டுமே. ஆள்தான் பார்க்க மிகவும் சிறிது. ஆனால், விஷமோ மனிதர்க ளைக் கொல்லக் கூடிய அளவு கொடியது. இதன் வித்திற்கு மாற்று மருந்து இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை.

**துடுப்பு மீன்**

உலகிலேயே நீளமான, சதைப் பிடிப்பில்லாதது இந்தத் துடுப்பு மீன்தான் (oar fish). 36 அடி நீளம் வரை வளரும். பாம்பின் உடல் போல நீளமாக நீண்டு வளர்ந்திருக்கும். உடல் முழுதும் நீண்டு செல்லும் சிவப்பு துடுப்பு இருக்கும். இதை ரிப்பன் மீன் என்றும் சொல்வதுண்டு. இந்த மீனை மக்கள் கடல் பாம்பு எனத்தவறாக நினைத்துப் பயப்படுவதும் உண்டு.

**கல்பர் விலாங்கு**

கல்பர் விலாங்கு (gulper reel) மூன்று முதல் ஆறு அடிநீளம் வரை வளரக்கூடியது. இந்த விலாங்கு மீனுக்கு மிகப் பெரிய வாய் உண்டு. எவ்வளவு பெரிய இரை வந்தாலும் இது தன் வாயை ஒரு வலை போல் விரித்து, இரையை அப்படியே பிடித்துவிடும். பெரிய இரையைத் தாங்கும் அளவு இதன் வயிறும் விரிவடையும். இதற்கு நீண்ட, சாட்டை போன்ற வால் உண்டு.

**ராட்சஸக் கணவாய்**

மிகப் பெரிய உயிரினங்களில் இதுவும் ஒன்று. சராசரியாக 46 அடி நீளம் வரை வளரும். இதற்கு எட்டு ராட்சஸக் கைகள் உள்ளன. இவற்றின் நுனியில் உறிஞ்சக்கூடிய வகையிலான கப்புகள் இருக்கும். இவற்றை இரையின் மேல் வைத்தால், கெட்டியாகப் பிடித்துக்கொள்ளும். கையில் சிக்கும் எதையும் இது விழுங்கி விடும். இந்த ராட்சஸக் கணவாயை (giant squid) யாரும் உயிருடன் பார்த்ததில்லை என்கி றார்கள் ஆய்வாளர்கள்.



# விநோத மேம்பாலம்!

சென்னை கிண்டியில் உள்ள கத்திப்பாரா மேம் பாலத்தைப்பார்த்திருக்கிறீர்களா? வண்ணத்துப்பூச்சி போல பிரம்மாண்டமான இந்தப் பாலம் நான்கு சாலைகளை இணைக்கிறது. இந்தப் பாலத்தைக் கடப்பதற்கே வாகனம் ஓட்டுபவர்களுக்கு ஆயிரம் குழப்பங்கள் வந்துவிடும். ஆனால் விடயம் கத்திப் பாரா மேம்பாலம் பற்றியது அல்ல. அமெரிக்காவின் 'ஹை ஃபைவ் இன்டர்சேஞ்ச்'பாலம் பற்றியது.

டல்லாஸ் நகரில் பிஸியான இரண்டு நெடுஞ்சா லைகளை இணைக்கும் பிரம்மாண்ட பாலம் இது. இந்தப் பாலம் 12 மாடிக் கட்டடம் அளவுக்கு மிகவும் உயரமானது. இந்தப் பாலத்தோடு 37 பாலங்களை இணைத்திருக்கிறார்கள். இந்த இணைப்பில் ஐந்து அடுக்குகளில் அடுத்தடுத்து சாலைகள் அமைக் கப்பட்டுள்ளன. பார்ப்பதற்கு குழப்பத்தை வர வைத் தாலும், மேம்பாலம் இணைப்பு மிகவும் நேர்த்தி யாக இருக்கிறது.

உலகின் விநோதமான சாலைகளில் 'ஹை ஃபைவ் இன்டர்சேஞ்ச்' பாலத்துக்கும் இடம் கொடுத் திருக்கிறார்கள்.

# அது என்ன வரிக்கழுதை?

கிராமங்களில் வீட்டில் வளர்க்கும் கழுதைகளைப் பார்த்திருப்பீர்கள். பொதி சுமக்கும் கோவேறு கழுதை களைப் பற்றியும் கேள்விப்பட்டிருப்பீர்கள். காட்டுக் கழுதைகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

ஆப்ரிக்காவில் காட்டுக் கழுதைகள் நிறைய உள்ளன. இவற்றை 'சோமாலியக் கழுதைகள்' என்று சொல்கிறார் கள். பார்ப்பதற்குப் பழுப்பும் வெள்ளையும் கலந்த வழக்கமான கழுதைகள் போலவே தெரியும். ஆனால், வரிக்குதிரைகளைப் போல இந்தக் கழுதைகளின் கால்களில் காணப்படும் அழகான வரிகள் இவற்றை வித்தியாசப்படுத்திக் காட்டும். சோமாலியா, எத்தியோப் பியா, எரித்திரியா போன்ற நாடுகளில் இந்தக் காட்டுக் கழுதைகள் நிறைய உள்ளன.

இந்த நாடுகளை அடிக்கடி பஞ்சம் தாக்கும் என்பதால் உணவுக்கும் தண்ணீருக்கும் பல நாள்கள் திண்டாட்ட மாகவே இருக்கும். அதன் காரணமாக இந்த இனம் வேகமாக அழிந்து வருகிறது. காட்டுக் கழுதைகளின் எண்ணிக்கை ஆயிரத்துக்குள் இருக்கும் என்கிறார்கள் காட்டுயிர் ஆர்வலர்கள்.





# இது எந்த நாடு?



தேவதைக் கதைகளின் நாடு

கீழே உள்ள 10 குறிப்புகள் ஒரு குறிப்பிட்ட நாட்டைக் குறிக் கின்றன. அது எந்த நாடு என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. ஸ்காண்டிநேவிய நாடுகளில் ஒன்று. ஸ்வீடனுக்குத் தென் மேற்காகவும் நோர்வேக்குத் தெற்காகவும் உள்ளது.
2. இதன் தலைநகர் கோபன்ஹேகன்.
3. தேசிய விளையாட்டு கால்பந்து.
4. ஐஸ்லாந்துக்கு அடுத்தபடியாக உலகில் மிக அமைதியான நாடு இது என்று கருதப்படுகிறது.
5. மன்னராட்சி நீண்ட காலத்துக்குத் தொடரும் நாடு இது (ஆயிரம் வருடங்களுக்கும் அதிகமான மன்னராட்சி).
6. இங்கு 407 தீவுகள் இருக்கின்றன. இவற்றில் 70 தீவுகளில் மட்டுமே மனிதர்கள் வசிக்கிறார்கள்.
7. இதுவரை இந்த நாட்டைச் சேர்ந்த 14 பேர் நோபல் பரிசு பெற்றுள்ளனர்.
8. 'தேவதைக் கதைகளின் தந்தை' என்று போற்றப்படும் ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆன்டர்சன் இந்த நாட்டைச் சேர்ந்தவர்.
9. வானியல் விஞ்ஞானி டைகோ பிராஹே இந்த நாட்டில் பிறந்தவர்.
10. குழந்தைகள் விரும்பும் ஒன்றுடன் ஒன்று பொருந்தக்கூடிய பிளாஸ்டிக் துண்டுகளால் ஆன விளையாட்டுப் பொருள்களை உருவாக்கும் 'லீகோ' நிறுவனம் இங்கேதான் இருக்கிறது.

விடை: டென்மார்க்

# அமேசான் என்ற 'நதி உலகம்'!



உலகின் மிக நீளமான ஆறு, அதிக நீரைக் கடலில் கலக்கும் ஆறு எது? பிரேசில் நாட்டில் பாயும் அமே சான் நதிதான் அது. இந்த ஆற்றின் நீளம் 6,760 கிலோ மீற்றர்.

இந்த ஆறு ஒவ்வொரு நாளும் அட்லாண்டிக் கடலில் கலக்கும் நன்னீரின் அளவு எவ்வளவு தெரியுமா? ஒட்டு மொத்த பிரிட்டனின் இரண்டு ஆண்டு நன்னீர் தேவைக்குச் சமமானது.

இதயத்துக்குள் ஓடும் நரம்புகளைப் போல, வெப்ப மண்டல மழைக்காட்டுக்குள் இந்த ஆறு பாயும் பகு தியே அமேசான் காடு.

அமேசான் மழைக்காடுகளின் 60 சதவீதம் பிரேசில் நாட்டில் இருக்கிறது. பிரேசில் நாட்டின் மொத்தப் பரப்பில் பாதியை அமேசான் மழைக்காடுகளே நிறைத்துள்ளன.

பூமிப்பந்தின் ஒட்டுமொத்த ஆக்சிஜன் தேவையில் பாதியை அமேசான் மழைக்காடுகளே தருகின்றன.

உலகில் வாழும் மொத்த உயிரின வகை கள் ஏறத்தாழ 1 கோடி. இதில் 10 சதவீதம், அதாவது 10 லட்சம் உயிரின வகைகள் அமேசான் காட்டில்தான் வாழ்கின்றன.

பூமியில் உள்ள தாவரங்கள், உயிரின வகைகளில் 30 சதவீதம் அமேசான் மழைக்காடுகளில்தான் உள்ளன.

1,800 வகைப் பறவைகள், 250 வகைப் பாலூட்டிகள் உள்ளிட்டவை அங்கே வாழ்கின் றன.

அமேசான் ஆற்றில் மட்டும் 2,000 மீன் வகைகள் வாழ்கின்றன.

அமேசான்காடுகளில் இன்னும் அறியப்படாத, மனிதர்கள் செல்லாத பகுதிகள் நிறைய இருக்கின்றன. அதனால் புதியவற்றைக் கண்டுபிடிக்கும் நிகழ் வுகள் தொடர்ச்சியாக நடைபெறும் காடாக அமேசான் இருக் கிறது.

அமேசான் காட்டுப் பகுதியில்தான் பிரேசிலின் உயர மான மலை இருக்கிறது. பிகோ டா நெப் லினா என்ற அந்த மலையின் உயரம் 9,888 அடி.

உலகிலேயே நன்னீரால் சூழப்பட்ட மிகப் பெரிய தீவு அமேசான் ஆற்றுப் பகுதியில் உள்ள மராஜோ. இது சுவிற்சர்லாந்தின் பரப்பளவுக்கு இணையானது.

அமேசான் காட்டுப்பகுதியை ஒட்டியிருக்கும் மனாவ்ஸ் நகரம் ரப்பர் உற்பத்திக்குப் புகழ்பெற்றது. 1890 - 1920 வரையிலான 30 ஆண்டுகளில், இந்த ஒரு பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட ரப்பரே உலகம் முழுவதும் சென்றது.

அட்லாண்டிக் கடலிலிருந்து 1,600 கி.மீ. தொலைவில் உள்ள மனாவ்ஸ் நகரம், அமேசான் நதியின் பிரம்மாண் டம் காரணமாக ஒரு துறைமுகமாகவே செயல்படுகிறது. உலகின் மிகப் பெரிய கப்பல்கள் இங்கே நின்று செல்கின் றன என்றால் பார்த்துக்கொள்ளுங் கள்.

அமேசான் கரையில் வீற்றிருக்கும் மனாவ்ஸ் நகரில் 2014 ஃபிபா உலகக் கால்பந்து கோப்பையின் நான்கு போட்டிகள் நடைபெற்றன. அதற்காகக் கட்டப்பட்ட மைதா னத்துக்கு 'அரேனா அமேசானியா' என்று பெயர் வைக் கப்பட்டது.

## தற்போது இலங்கையில் 43,714 சிறுவர் தொழிலாளர்!

இலங்கையில், 43 ஆயிரத்து 714 சிறுவர் தொழிலாளர்கள் உள்ளனர் எனவும், சப்ரகமுவ மாகாணத்தில் மட்டும், 2 ஆயிரத்து 179 பேர் உள்ளனர் எனவும் இரத்தினபுரி மாவட்டச் செயலாளர் மாலனி லொக்குபோதாகம தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

சிறுவர் தொழிலாளர்கள் குறித்த தகவல்களை நான் பெற்றுக்கொண்டுள்ளேன். சிறுவர் தொழிலாளர்களற்ற மாகாணமாக சப்ரமுகவ மாகாண சபையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

சிறுவர் தொழிலாளர்கள் தொடர்பில், தனியார்துறை வர்த்தகர்கள், மாணிக்கக்கல் வர்த்தகர்கள் உட்பட தேயிலை, இறப்பர், தென்னை தோட்ட உரிமையாளர்கள் ஆகியோருக்குத் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் சப்ரகமுவ மாகாண சபையின் மூலம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாட்டை மீண்டும் காட்டிக் கொடுக்க அரச முயற்சிக்கின்றது: குணதாச!

போர்க்குற்றங்களை விசாரிக்க வேண்டாம் என ஐக்கிய நாடுகள் சபையில் மண்டியிட்டு நாட்டை மீண்டும் காட்டிக்கொடுக்க அரசு முயற்சிக்கின்றது என்று தேசிய ஒழுங்கமைப்பு ஒன்றியத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

ராஜகிரியவில் அமைந்துள்ள ஒன்றியத்தின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நீக்குதல், புதிய அரசமைப்பினூடாக இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணல் மற்றும் உண்மைகளைக் கண்டறியும் ஆணைக் குழுவை ஸ்தாபித்து அதனூடாக



பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுத்தல் போன்ற உறுதிமொழிகள் வழங்கி என்றும் மீளா பாதாளத்தில் நாட்டை தள்ளிவிடுவதாகவே அரசின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

மேலும், ஜனாதிபதியின் தற்போதைய நகர்வுகள் நாட்டுக்கு மிகவும் ஆபத்தானதாகும். போர் குற்றங்களை ஒப்புக்கொண்டு அதனை விசாரிக்க வேண்டாம் என்று கோருவது போலவே அரசின் அறிவிப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன.

புதிய அரசமைப்பின் ஊடாக நாட்டை பிளவுபடுத்தும் மேற்குலக நாடுகளின் சதித்திட்டத்திற்குள் இலங்கை பல வருட காலமாக சிக்குண்டுள்ளது. தற்போது அந்த சதித்திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான புறச் சூழல் ஐ.நாவில் அமைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாள்களில் புதிய அரசமைப்பிற்கான வரைவை நாடாளுமன்றத்தில் அரசு முன்வைக்கவுள்ளது. அரசு உத்தேசித்துள்ள புதிய அரசமைப்பானது நாட்டை பிளவுபடுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கொழும்பில் பயணிக்கும் பஸ்களில் திருட்டுக்கள்; சம்பவம் தொடர்பில் வெளியான காணொலி!

கொழும்பு,செப்.26

சிலர் குழுக்களாக இணைந்து பஸ்களில் பயணிப்போரின் பணம் மற்றும் உடைமைகள் திருடப்படுகின்றன என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து புறநகர் பகுதி நோக்கி பயணித்த பஸ்ஸில் இளைஞன் ஒருவரின் பணப்பை திருடப்பட்டுள்ளது. கோட்டைக்கு அருகில் வைத்து இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் பஸ்ஸில் இருந்த சி.சி.டீ.வி. கமராவில் பதிவாகியுள்ளது.

பஸ்ஸுக்குள் நுழைந்த சந்தேக நபர் மிகவும், நுட்பமான முறையில் பயணிகளிடம் பணத்தை அபகரிக்கும்காட்சி பதிவாகியுள்ளது.

இதுபோன்று பல்வேறு சூறையாடல் சம்பவங்கள் கொழும்பில் இடம்பெறுகின்றன என்றும் பொது மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

(கு)

## அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்: வாசுதேவ!

அரசியல் கைதிகளில் தண்டனை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களுக்கும், இதுவரை குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படாதவர்களுக்கும் பொது மன்னிப்பு வழங்கி விடுதலைசெய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.



சோசலிச மக்கள் முன்னணி நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படாத அரசியல் கைதிகளை விடுதலை செய்யும்போது அவர்கள் தொடர்பில் தேடிப் பார்க்கும் பொறுப்பை பொலிஸாருக்கு வழங்க வேண்டும். அவர்கள் பொலிஸ் நிலையத்துக்கு வந்து தங்களை உறுதிப்படுத்தவேண்டும் போன்ற நிபந்தனைகளை விதிக்கலாம்.

எனினும், குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை இடம்பெற்றுக்கொண்டிருப்பவர்கள் தொடர்பில் அரசுக்கு எந்த தலையீட்டையும் மேற்கொள்ள முடியாது. வழக்கு விசாரணைகள் முடிந்த பின்னர் அரசால் அவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கை தொடரும் என ஆஸ்திரேலியா அறிவிப்பு

கொழும்பு,செப்.26

படகுகள் வழியாக ஆஸ்திரேலியாவுக்குள் வர முயற்சிக்கும் அகதிகள் மற்றும் தஞ்சக் கோரிக்கையாளர்களை திருப்பி அனுப்பும் நடவடிக்கை தொடரும் என ஆஸ்திரேலிய அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆஸ்திரேலிய எல்லைகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கை கமாண்டரும் விமானப்படைத் துணைத் தளபதியுமான Stephen Osborne எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்–

ஆஸ்திரேலியா தனது எல்லை பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தியுள்ளது. ஆஸ்திரேலிய எல்லை பாதுகாப்புப் படை, கடற்படை மற்றும்விமானப்படைஆகியன ஆஸ்திரேலிய எல்லையை நோக்கிவரும் சந்தேகத்துக்கிடமான படகுகளை கண்டுபிடித்து அவற்றை இடைமறிப்பதற்கான தமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளன.

ஆஸ்திரேலியா தனது எல்லைகளைப் பாதுகாப்பதிலும் ஆள்கடத்தலை தடுப்பதிலும் மிகவும் உறுதியாகவுள்ளது.

ஆள்கடத்தல்காரர்களின் பொய்களை நம்பாதீர்கள். சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா வர முயற்சி செய்யும் எவரும் ஒருபோதும் ஆஸ்திரேலியாவை தமது வாழ்விட மாக்க முடியாது என அவர் கூறியுள்ளார்.

படகுகள்வழியாகவரமுயற்சிக்கும் அகதிகள் மற்றும் தஞ்சக் கோரிக்கையாளர்களுக்கான எச்சரிக்கை தமிழ், இந்தி, பெங்காலி, பர்மீஷ், ரோஹிங்கியா, சிங்களம், அரபி, ஆங்கிலம் உள்ளிட்ட பல மொழிகளில் விடுக்கப்பட்டுள்ளது.

(கு)

# மாம்பழ உற்பத்தி வலயம் யாழ்ப்பாணத்தில் விரைவில்



கொழும்பு,செப்.26

இலங்கையின் முதலாவது மாம்பழ உற்பத்திவலயம், யாழ்ப்பாணம் மற்றும் தம்புள்ள ஆகிய இடங்களில் உருவாக்கப்படவுள்ளது. 'நாமே வளர்த்து நாமே சாப்பிவோம் என்ற தொனிப்பொருளின் கீழ், இந்த விவசாய அபிவிருத்தி திட்டம், முன்னெடுக்கப்படவுள்ளது என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தின் கீழ் முதலாவது விவசாய அறுவடை வலயம், தம்புள்ள மற்றும் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும்.உலக வங்கியின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் இந்த விவசாய நவீனமயப்படுத்தல் திட்டத்தின் கீழ், ரிஜேசி(Tom & JC mango) வகையைச்சேர்ந்த ஒரு இலட்சம் மாங்கன்றுகள் நடுகை செய்யப்படும்.முதற்கட்டமாக, 12500 மாங்கன்றுகள், தம்புள்ளவில் நடப்படவுள்ளன.

ரிஜேசி மாம் மரம், இலகுவாக பயிரிடக் கூடியது. உலர் மற்றும் ஈரவலயங்களில் நன்றாக வளரக் கூடியது. ஆண்டு முழுவதும் காய்க்கக் கூடியது. இதற்கு உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் நல்ல கேள்வி உள்ளது.

ஏற்றுமதிச்சந்தையை இலக்கு வைத்து இந்த மாம்பழங்களை உற்பத்தி செய்யும் போது, விவசாயிகளால் அதிக வருவாயை பெற முடியும்.

எதிர்வரும் 28ஆம் திகதி, யாழ்ப்பாணம் மற்றும் தம்புள்ளவில் முதலாவது மாம்பழ உற்பத்தி வலயத்தை உருவாக்கும், ஆரம்ப நிகழ்வு இடம் பெறவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## காய்ச்சல் ஏற்பட்டால் உடன் வைத்தியரை நாடுங்கள்!

எந்த வகையான காய்ச்சல் ஏற்பட்டாலும் உடனடியாக வைத்தியரை நாடுமாறு விசேட வைத்திய நிபுணர்கள் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

மேலும் காய்ச்சல் வந்தால் தொழில்களுக்கோ, பாடசாலைகளுக்கோ செல்ல வேண்டாம் என்றும் கோரப்பட்டுள்ளது.

இலங்கையில் டெங்கு நோய்த் தாக்கத்தால் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 44 பேர் பலியாகினர்.

அத்துடன் 38 ஆயிரத்து 565 பேர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் மீண்டும் டெங்கு நோய் அதிகரிக்கக்கூடிய சாத்தியம் இருப்பதாக தொற்றுநோய் தடுப்பு பிரிவு எச்சரித்துள்ளது.

## மாலைதீவு ஜனாதிபதிக்கு இலங்கை வாழ்த்து



மாலைதீவு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள எதிர்க்கட்சி கூட்டணி வேட்பாளர் இப்ராஹிம் முஹம்மட் சாலிக்கு இலங்கை அரசு வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

புதிய ஜனாதிபதியின் கீழ் இரண்டு நாடுகளுக்கும் இடையில் இருதரப்பு உறவுகள் மேலும் பலமடையும் என வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடகொரிய தலைவருடன் அடுத்த சந்திப்பு விரைவில் நடக்கும் என்கிறார் ட்ரம்ப்!



வொஷிங்டன்,செப்.26

வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன்னுடன் கூடிய விரைவில் இரண்டாம் கட்ட சந்திப்பு நடைபெறும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட்ட்ரம்ப்தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளின் எதிர்ப்புகளையும் மீறி வடகொரியா பலமுறை அணு குண்டுகளையும், கண்டம்விட்டு கண்டம் பாயும் பல ஏவுகணைகளையும் பரிசோதித்தமையால் அமெரிக்காவின் கோபத்திற்கு ஆளாகி பொருளாதாரத் தடைகளைச் சந்தித்தது.

அதைத்தொடர்ந்து, தென்கொரியா எடுத்த முயற்சியின் பலனாகத்தான் வட, தென் துருவங்கள் போன்று விளங்கி வந்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன்னும் ஜுன் மாதம் சிங்கப்பூரில் சந்தித்துப் பேசினர்.

மேலும், சமீபத்தில் மூன்று நாள் பயணமாக வட கொரியா சென்ற தென் கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன்னுக்கு சிறப்பான வரவேற்பு அளித்த கிம் ஜாங் உன் அவருடன் மிகவும் நட்புடன் பழகினார். இந்த பயணத்தின் போது டொனால்ட் ட்ரம்ப்புக்கு, கிம் ஜாங் உன் எழுதிய ரகசிய கடிதம் மூன் ஜே இன் வாயிலாக வெள்ளை மாளிகைக்குக் கொண்டு சேர்க்கப்பட்டது.

அணு ஆயுதங்களை அழிக்கும் நடவடிக்கைகளில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறோம் என கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கிம் ஜான் உன், ட்ரம்ப்பை மீண்டும் சந்திக்க விருப்பம் தெரிவித்துள்ளார் என அக்கடிதம் குறித்து வெள்ளை மாளிகை செய்தி வெளியிட்டது.

இந்நிலையில், கிம் ஜான் உன்னுடன் விரைவில் இரண்டாம் கட்ட பேச்சு நடத்தப்படும் என டொனாட் ட்ரம்ப் கூறியுள்ளார். நியூயோர்க்கில் நடைபெற்று வரும் 73 ஆவது ஐக்கிய நாடுகள் பொதுச்சபை கூட்டத்தின் போது தென் கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன்னைச் சந்தித்து பேசிய பின் அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.


இது தொடர்பாக ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளவை வருமாறு–

இது மிகவும் வித்தியாசமான உலகம், முன்னர் மிகவும் அபாயகரமான சூழல் நிலவியது. ஆனால் ஓர் ஆண்டுக்கு பிறகு காலம் மாறிவிட்டது. அணு ஆயுத அழிப்பில் கிம் காட்டும் அக்கறையால் நான் உற்சாகம் அடைந்துள்ளேன்.

எங்களுக்கு (ட்ரம்ப் மற்றும் கிம்) எந்த அவசரமும் இல்லை. யாரும் இதுவரை செயல்படுத்தாததை நாங்கள் செயல்படுத்தி அதில் முன்னேற்றம் கண்டுள்ளோம்.

எங்களுக்கு இடையிலான உறவு அசாதாரணமான வகையில் மிகவும் சிறப்பாக உள்ளது. எங்கள் இருவருக்கும் இடையே கூடிய விரைவில் இரண்டாம் கட்ட சந்திப்பு நடைபெறும்' என அவர் தெரிவித்துள்ளார்.

# 400 ஆண்டுக்கு முன் மூழ்கிய கப்பல் போர்த்துக்கல் நாட்டில் கண்டுபிடிப்பு!



போர்த்துக்கல் நாட்டில் 400 ஆண்டுகளுக்கு முன்பு மூழ்கிய கப்பல் லிஸ்பனின் புறநகரான கஸ்காயிஸ் கடற்கரை பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த 400 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் இருந்து நறுமண பொருள்களை ஏற்றிக் கொண்டு போர்த்துக்கல் நாட்டுக்கு சென்ற கப்பல் லிஸ்பன் அருகே கடலில் மூழ்கியது.

அதை கண்டுபிடிக்கும் முயற்சியில் ஆழ்கடல் நீச்சல் வீரர்கள் ஈடுபட்டனர். இந்த நிலையில் அந்த கப்பல் இருக்கும் இடம் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்தக் கப்பலின் உடைந்த பாகத்தில் 40 அடி ஆழத்தில் நறுமண பொருள்கள், 9 பித்தளை பீரங்கிகள், போர்த்துக்கீசியர்கள் பயன்படுத்தும் ஆடை அலங்கார கரு விகள், சீன செரமிக்ஸ் பொருள்கள், அடிமைகளை விலைக்கு வாங்க பயன்படுத்தும் ரூபா நோட்டுகள் போன்றவை இருந்தன.

இவை கடந்த 3 ஆம் திகதி லிஸ்பனின் புறநகரான கஸ்காயிஸ் கடற்கரை பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டன. கி.பி.1575, 1625இற்கு இடையே போர்த்துக்கல் நாட்டுக்கும், இந்தியாவுக்கும் இடையே நறுமண பொருள்கள் வர்த்தகம் உச்சகட்டத்தில் இருந்தது. அப்போது தான் இந்தக்கப்பல்மூழ்கியிருக்க வேண்டும் என நிபுணர்கள் கணித்துள்ளனர்.

# அமெ. நீதிமன்றுக்கு ட்ரம்ப் பரிந்துரைத்த நீதிபதி மீது மீண்டும் பாலியல் முறைப்பாடு!

வொஷிங்டன்,செப்.26

அமெரிக்க உச்சநீதிமன்றத்துக்கு ட்ரம்ப் பரிந்துரைத்த நீதிபதி கவனாக் மீது தற்போது மற்றொரு பெண்ணும் பாலியல் புகார் கூறியுள்ளார்.

அமெரிக்க உச்சநீதிமன்றத்துக்கு புதிய நீதிபதியாக, நியூயோர்க் பகுதியை சேர்ந்த பிரட் கவனாக்கின் பெயரை ஜனாதிபதி ட்ரம்ப் பரிந்துரைத்தார். இவரை செனட் உறுப்பினர்கள் வாக்குப் போட்டு தேர்வு செய்ய இருந்த நேரத்தில், அவர் மீது பாலியல் புகார்கள் எழுந்துள்ளன. எனவே இந்த வாக்கெடுப்பு தள்ளி வைக்கப்பட்டு உள்ளது.

இதில் வெளிப்படையாக அளித்த கிறிஸ்டின் பிளாசி போர்ட் என்ற பெண்ணின் புகாரை செனட் நீதிக்கமிட்டி நாளை 27 ஆம் திகதி விசாரிக்கிறது. இதில் பாதிக்கப்பட்ட பெண் மற்றும் நீதிபதி கவனாக் ஆகியோரிடம் தனித்தனியாக விசாரித்து முடிவு எடுக்கப்படும்.

இந்த புகார் ஏற்படுத்திய அதிர்ச்சி மறைவதற்குள் நீதிபதி கவனாக் மீது தற்போது மற்றொரு பெண்ணும் பாலியல் புகார் கூறியுள்ளார். அதாவது 1983 இல் ஏல் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டு இருந்த



காலத்தில், நீதிபதி கவனாக் தன்னை பாலியல் ரீதியாக துன்புறுத்தினார் என டெபோரா ராமிரெஸ் (வயது 53) என்ற பெண் புகார் கூறியுள்ளார்.

ஆனால் இந்த குற்றச்சாட்டை நீதிபதி கவனாக் மறுத்துள்ளார். தனது புகழுக்கு களங்கம் ஏற்படுத்தவே இதுபோன்ற பாலியல் புகார்கள் கடைசி நேரத்தில் கிளம்புகின்றன என அவர் குற்றம் சாட்டி உள்ளார்.

உச்சநீதிமன்ற நீதிபதியாக ட்ரம்ப் பரிந்துரைத்த நபர் மீது அடுக்கடுக்காக பாலியல் புகார்கள் குவிந்து வருகின்றமை அமெரிக்க நீதித்துறையில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# இம்ரான் கானை தகுதிநீக்கம் செய்யக் கோரிய மனுவை தள்ளுபடி செய்தது பாக். உச்சநீதிமன்றம்!



இஸ்லாமாபா,செப்.26

இம்ரான் கான் மீதான தகுதி நீக்க மனுவை பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தானின் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சியின் தலைவரும், தற்போதைய பிரதமருமான இம்ரான் கானை தகுதிநீக்கம் செய்யுமாறு கடந்த ஆண்டு மே மாதம் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அப்போது அவர் எம்.பியாக இருந்தார்.

அந்த மனுவில்; எம்.பி. மனுத்தாக்கலின் போது அவர் தனது பிள்ளையின் பெயரை குறிப்பிடவில்லை. இதனால்; அவர் அரசின் விதிமுறைகளுக்கு உண்மையாக இல்லை எனக் குற்றம்சாட்டப்பட்டு இருந்தது.

அந்த மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் நீதிபதி இஜாசுன் அஹ்சான் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது இந்த மனு காலாவதியாகி விட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார். அது கடந்த நாடாளுமன்ற காலகட்டத்தில் போடப்பட்டது எனக்கூறிய நீதிபதி மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார்.

# இரண்டு வாரத்திற்குள் சிரியாவுக்கு நவீன ஏவுகணைகளை வழங்க ரஷ்யா முடிவு!

உயர்தொழில்நுட்ப வான் பாதுகாப்பு ஏவுகணைகளான எஸ்- 300 ரக ஏவுகணைகள் இரண்டு வாரத்திற்குள் சிரியாவுக்கு வழங்கப்படும் என ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சர் செர்கி சோய்கு தெரிவித்துள்ளார்.

சிரியாவில் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போரில் அரசுப் படைகளுக்கு ரஷ்யா ஆதரவு அளித்து வருகிறது. கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள பகுதிகளில் அவ்வப்போது விமான தாக்குதலும் நடத்தி வருகிறது. இதேபோல் இஸ்ரேல் அரசு ஏவுகணைகள் மூலம் சிரியா மீது தாக்குதல் நடத்தி வருகிறது. அந்த ஏவுகணைகளை சிரியா அரசுப் படைகள் இடைமறித்து சுட்டு வீழ்த்துகின்றன.

இந்த பதற்றமான சூழ்நிலையில், சிரியாவின் லடாக்கியா மாகாணத்தில் கடந்த 17 ஆம் திகதி ரஷ்யாவுக்குச் சொந்தமான போர் விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது. இதில், விமானத்தில் பயணம் செய்த 15 ரஷ்ய ராணுவ வீரர்கள் பலியாகினர். அதைத்தொடர்ந்து, தங்கள் நாட்டின் விமானம் இஸ்ரேல் ராணுவத்தால் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கலாம் என ரஷ்யா முதலில் குற்றம்சாட்டியது.

ஆனால், தாக்குதல்களில் இருந்து தப்பிப்பதற்கு இஸ்ரேல் விமானிகள் ரஷ்ய விமானங்களை கேடயமாக பயன்படுத்தி வந்துள்ளனர் என்றும், விமானம் வீழ்த்தப்பட்ட லடாக்கியா பகுதியில் இஸ்ரேல் விமானங்கள் முன்னறிவிப்பின்றி தாக்குதலில் ஈடுபட்டுள்ளன என்றும் அச்சமயம் அந்த பகுதி வழியாக வந்த ரஷ்ய விமானம் சிரியா ராணுவத்தால் தவறுதலாக சுட்டுவீழ்த்தப்பட்டதுஎன்றும்விசாரணைக்கு பின்னர் ரஷ்யா தெரிவித்தது.

எனினும், இந்த விபத்துக்கு இஸ்ரேல் தான் பொறுப்பேற்க வேண்டும் என சிரியா மற்றும் ரஷ்யா வலியுறுத்தின. ஆனால் இதற்கு இஸ்ரேல் மறுப்புத்தெரிவித்துவிட்டது.

இதற்கிடையே, சுமார் 300 கி.மீ. தொலைவு வரை பாய்ந்து சென்று எதிரி ஏவுகணைகளை வழிமறித்து அழிக்கும் திறன் கொண்ட உயர்தொழில்நுட்ப எஸ்–300 ரக ஏவுகணைகள் இரண்டு வாரத்திற்குள் சிரியாவுக்கு வழங்கப்படும் என ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சர் செர்கி சோய்கு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் எதிர்ப்பு



ஏற்கனவே, கடந்த 2016 ஆம் ஆண்டு இவ்வகை ஏவுகணைகளை சிரியாவுக்கு வழங்க ரஷிய முயன்ற போது, இந்த ஏவுகணைகளை எங்கள் நாட்டுக்கு எதிராக சிரியா பயன்படுத்தக்கூடும் என இஸ்ரேல் கோரிக்கை தெரிவித்ததால் அந்த முடிவை ரஷ்யா கைவிட்டதை நினைவு கூற வேண்டும்.

இந்நிலையில், இஸ்ரேல் பிரதமர் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவை நேற்று முன்தினம் தொடர்புகொண்டு பேசிய ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், 'சிரியாவிற்கு எஸ்-300 ஏவுகணைகளை வழங்க முடிவு செய்துள்ளோம். சிரியாவில் உள்ள ரஷ்ய ரணுவ வீரர்களின் உயிர்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது' எனக் கூறினார்.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்துள்ள இஸ்ரேல் பிரதமர் அலுவலகம், 'ரஷ்யாவின் இந்த முடிவு இஸ்ரேல் பிரதமருக்கு வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. ரஷ்யா போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு பொறுப்பேற்க வேண்டியது சிரியா ராணுவம் தான். ஆனால், இவ்விவகாரத்தில் அங்கள் மீது ரஷ்யா குற்றம்சாட்டிறது.

உயர்தொழில்நுட்ப ஏவுகணைகள் பொறுப்பற்றவர்களின் கைகளில் கிடைத்தால், அதை அவர்கள் தவறாக பயன்படுத்தக்கூடும். எனவே, ரஷ்யாவின் முடிவால் இந்த பிராந்தியம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது'. எனக் குறிப்பிட்டுள்ளது.

## ஐ.நா. பொதுக் கூட்டம் ஆரம்பம்:

# பல நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களுடன் சுஷ்மா சந்திப்பு!



ஐ.நாபொதுச்சபைகூட்டத்தில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றுள்ள சுஷ்மா ஸ்வராஜ், ஸ்பெயின், கொலம்பியா, நேபாளம் உள்ளிட்ட நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இந்த ஆண்டுக்கான ஐ.நா பொதுச்சபையின் 73 ஆவது கூட்டம், நேற்று ஆரம்பமானது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் நியூயோர்க் நகருக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில்,உலகபோதை பொருள் விவகாரத்தில் நடவடிக்கை எடுப்பதற்கான உலகளாவிய கூட்டம் ஒன்று டொனால்ட்ட்ரம்ப்தலைமையில் நடந்தது. இதில்பங்கேற்றசுஷ்மா சுவராஜ் கூட்டத்தின் முடிவில் ஸ்பெயின், கொலம்பியா, நேபாளம் மற்றும் மொராக்கோ உள்ளிட்ட நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களைச் சந்தித்து பேசினார்.

இந்தச் சந்திப்பின் போது, அந்நாடுகளுடனான இந்தியாவின் நல்லுறவை மேம்படுத்தும் வகையில் சுஷ்மா சுவராஜ் பேச்சில் ஈடுபட்டார் என வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ராவேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

# நான் இந்தியாவை மிகவும் நேசிக்கிறேன்; மோடிக்கு என் அன்பைத் தெரிவியுங்கள்!

## சுஷ்மாவிடம் கூறினர் ட்ரம்ப்

ஐ.நா பொதுச்சபை கூட்டத்தின் போது இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜிடம் எனது நண்பர் மோடிக்கு என் அன்பை தெரிவியுங்கள் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறியுள்ளார்.

அமெரிக்காவின்நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் மாதம் ஐ.நா. சபையின் பொதுக்கூட்டம் நடைபெறுவது வழக்கம்.

இரண்டு வாரம் நடைபெறும் இந்த பொதுக்கூட்டத்தில் உலக நாடுகளின் தலைவர்கள் பங்கேற்று நடப்பு ஆண்டில் உள்ள முக்கிய விவகாரங்கள் குறித்து பொதுவிவாதம் நடத்துவார்கள்.



இந்த ஆண்டிற்கான ஐ.நா. பொதுச்சபையின் 73 ஆவது கூட்டம், நேற்று துவங்கி ஒக்டோபர் 1 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்தில் பங்கேற்பதற்காக இந்திய மத்திய வெளியுறவு துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் நியூயோர்க் நகருக்குச் சென்றுள்ளார். இந்தநிலையில், உலக போதைப்பொருள் விவகாரத்தில் நடவடிக்கை எடுப்பதற்கான உலகளாவிய கூட்டம் ஒன்று டொனால்ட் ட்ரம்ப் தலைமையில் நடந்தது.

இந்தக் கூட்ட முடிவில் ஐ.நா.வுக்கான அமெரிக்க தூதர் நிக்கி ஹாலே சுவராஜை கட்டிபிடித்து அன்பை வெளிப்படுத்தினார். அதன்பின் ட்ரம்பிடம் சுஷ்மாவை அறிமுகப்படுத்தினார்.

அதன்பின் சுஷ்மா சுவராஜ், பிரதமர் நரேந்திர மோடியிடம் இருந்து அன்பினை பெற்று வந்துள்ளேன் என ட்ரம்பிடம் கூறினார். இதற்கு ட்ரம்ப், நான் இந்தியாவை நேசிக்கிறேன். எனது நண்பர்பிரதமர்மோடிக்கு என் அன்பை தெரிவியுங்கள் என சுஷ்மா சுவராஜிடம் கூறியுள்ளார்.

# நாம் அனைவரும் ஒன்றிணைந்து பயங்கரவாதத்தை வேரறுக்க வேண்டும்!

## ஐ.நா. பொதுசபை கூட்டத்தில் சுஷ்மா




அனைவரும் ஒன்றிணைந்து பயங்கரவாதத்தை வேரறுக்க வேண்டும் என ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் ஒவ்வொரு ஆண்டும் செப்ரெம்பர் மாதம் ஐ.நா. சபையின் பொதுக் கூட்டம் நடைபெறுவது வழக்கம். அவ்வகையில் ஐ.நா. பொதுச் சபையின் 73 ஆவது கூட்டம் நேற்றுத் தொடங்கியது.

இதில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் பங்கேற்றுள்ளார். அங்கு நெல்சன் மண்டேலா அமைதி உச்சிமாநாட்டில் அவர் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.


அப்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

இந்தியாவுக்கும், தென்னாபிரிக்காவுக்கும்நெருங்கிய தொடர்பு உள்ளது. இந்திய அரசு மண்டேலாவுக்கு பாரத்ரத்னாவிருதுவழங்கி கௌரவித்தது. மேலும் காந்தியடிகளும், மண்டேலாவும் அமைதி வழியில் பொதுமக்களின் விடுதலைக்காக போராடியவர்கள்.

எந்த வகையிலும் பயங்கரவாதத்தை ஆதரிக்கக் கூடாது. அனைவரும் ஒன்றிணைந்து பயங்கரவாதத்தை வேரறுக்க வேண்டும். பயங்கரவாதம் மற்றும் வெறுப்புணர்வுக்கு எதிராக சர்வதேச தலைவர்கள் ஒன்றிணைந்து செயல்பட்டு, நமது சந்ததியினருக்கு சிறந்த உலகை உருவாக்குவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ரபேல் போர் விமான விவகாரம்;

# காங்கிரஸின் பொய் பிரசாரத்தை முறியடிப்போம் என்றார் சீதாராமன்



ரபேல்' போர் விமான விவகாரத்தில், நாடு முழுவதும் காங்கிரஸார் செய்து வரும் பொய் பிரசாரத்தை முறியடிப்போம் என்று நிர்மலாசீதாராமன்கூறியுள்ளார்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த நிறுவனத்திடம் இருந்து 'ரபேல்' போர் விமானங்கள் வாங்கும் விவகாரத்தில் ஊழல் நடந்துள்ளது என காங்கிரஸ்கட்சி குற்றம் சாட்டி வருகிறது.

இந்நிலையில், இதுகுறித்து ராணுவ அமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று முன்தினம் டில்லியில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் தெரிவித்தவை வருமாறு–

ரபேல் போர் விமான விவகாரத்தில், காங்கிரஸ் எழுப்பும் கேள்விகளுக்கு பொறுமையாக பதில் அளித்துக் கொண்டிருக்கிறோம். ஆனாலும், காங்கிரஸின் அடிப்படையற்ற, பொய்ப் பிரசாரம் தொடர்ந்து வருகிறது. இதை எதிர்கொள்வதைத் தவிர, வேறு வழி இல்லை.

அந்தப் பிரசாரத்தை முறியடிப்போம். நாடு முழுவதும் சுற்றி வந்து உண்மையை சொல்வோம்.

காங்கிரஸ் கட்சியில் விரக்தி நிலவுகிறது. ஒவ்வொரு பிரச்சினையிலும் அரசு எவ்வித களங்கமும் இல்லாமல் இருப்பதை ஒரு பொருட்டாகவே கருதாமல், பொய்க் குற்றச்சாட்டை சுமத்தி வருகிறது.

இந்தவிவகாரத்தில், சர்வதேச பரிமாணத்தையும் நாங்கள் பார்க்கிறோம்.

கடந்த ஓகஸ்ட் 30 ஆம் திகதி, காங்கிரஸ்தலைவர் ராகுல் காந்தி, இன்னும் 2 வாரங்களில், ரபேல் விவகாரத்தில் பெரிய குண்டு வெடிக்கும் என்று 'டுவிட்டர்' பக்கத்தில் தெரிவித்தார். அதேபோல்,பிரான்ஸ்முன்னாள் ஜனாதிபதி, சர்ச்சைக்குரிய கருத்தைக் கூறியுள்ளார்.

இது, தற்செயலாகநடந்ததாக கருத முடியாது. காங்கிரஸ் கட்சி எப்படி இதை முன்கூட்டியே கணித்தது? முன்பு ஒருமுறை, காங்கிரஸ் தலைவர்கள் பாகிஸ்தானுக்கு சென்று பிரதமர் மோடிக்குஎதிராகபாகிஸ்தானின் உதவியை கேட்டது நினைவுக்கு வருகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

# கச்சதீவு அருகே ராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் விரட்டியடிப்பு!

கச்சதீவு அருகேராமேஸ்வரம் மீனவர்களை விரட்டியடித்த இலங்கை கடற்படையினர் வலைகளையும், மீன்பிடி சாதனங்களையும் சேதப்படுத்தினர் என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தமிழக மீனவர்கள் ஒவ்வொரு முறையும் கடலுக்குச் செல்லும் போது எல்லை தாண்டி வருகின்றனர் எனக் கூறி இலங்கை கடற்படையினர்அவர்களைசிறைபிடிப்பதும், பல நேரங்களில் தாக்கி விரட்டியடிப்பதும் தொடர்ந்து நடந்து வருகின்றன.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் ராமேசுவரம் மற்றும் சுற்றுவட்டாரப்பகுதியைச் சோந்த 1000 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

இவர்களில் ஒரு தரப்பினர் கச்சதீவு அருகே நேற்று அதிகாலை மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் இங்கு மீன்பிடிக்கக்கூடாது எனக் கூறி மீனவர்களை எச்சரித்தனர்.

தொடர்ந்துமீனவர்களின்படகுகளில் ஏறிய இலங்கை கடற்படையினர் மீன்பிடி சாதனங்களையும், வலைகளையும் அறுத்து எறிந்து சேதப்படுத்தினர். மீனவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களை அள்ளி கடலில் வீசினர்

மேலும் சில மீனவர்களை தாக்கி அங்கிருந்து செல்லுமாறு விரட்டி அடித்ததனர் எனத் தெரிகிறது. இதனால் உயிருக்கு பயந்த மற்ற மீனவர்கள் பாதியிலேயே மீன்பிடிப்பதை கைவிட்டு விட்டு கரை திரும்பினர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணைக்கு அச்சம் ஏன்?


## ரபேல் விவகாரம் குறித்து ராகுல் காந்தி கேள்வி

ரபேல்' போர் விமான விவகாரத்தில் மறைப்பதற்கு எதுவும் இல்லை என்றால், நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணைக்கு உத்தரவிட பயப்படுவது ஏன் என்று ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி 2 நாள் பயணமாக உத்தரபிரதேசத்தில் உள்ள தனது சொந்த தொகுதியான அமேதிக்குநேற்று முன்தினம் சென்றார்.

அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அவர் தெரிவித்தவை வருமாறு–

பிரதமர் மோடி, தன்னை காவலாளி என்று சொல்லிக்கொள்கிறார். ஆனால், ஒரு காவலாளியே ஏழை மக்களிடம் கொள்ளையடித்தமை துரதிருஷ்டவசமானது. ஏழைகளிடம் இருந்து ரூ.20 ஆயிரம் கோடி பணத்தை பறித்து, அனில் அம்பானியின் பொக்



கெட்டில் போட்டுள்ளார்.

பிரதமர் மோடி, பிரான்ஸ் நாட்டுக்கு போகிறார். அங்கு அனில் அம்பானி கம்பெனிக்கு கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள ஒப்பந்தத்தை அளிக்கிறார். காவலாளி ஏன் அப்படி செய்தார் என்று அறிந்து கொள்ள மக்கள் விரும்புகிறார்கள்.

பிரதமர்பெரிதுபெரிதாகசொற்பொழிவு ஆற்றுகிறார். ஆனால், ரபேல் விவகாரம் பற்றி ஒரு வார்த்தை கூட பேச மறுக்கிறார். பிரான்ஸ் முன்னாள் ஜனாதிபதி, பிரதமர் மோடியை 'திருடன்' என்கிறார். ஆனாலும், மோடி எதுவும் பேசவில்லை.

நாடாளுமன்றத்தில் நான் கேள்வி எழுப்பியபோது கூட அவர் என் கண்களை பார்ப்பதை தவிர்த்து விட்டார். அவருக்கு பதில் அளிக்க தைரியம் இல்லை.

மத்தியநிதிஅமைச்சர் அருண் ஜெட்லி, 'ரபேல்' போர் விமான விவகாரத்தில், மறைப்பதற்கு எதுவும் இல்லை என்று கூறுகிறார். அப்படியானால், நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணைக்கு உத்தரவிட பயப்படுவது ஏன்?

இந்த ஆட்சியில் விவசாயிகளும், ஏழைகளும் அழுது கொண்டிருக்கிறார்கள். ஆனால், எல்லா பலன்களையும் அனில் அம்பானி, விஜய் மல்லையா போன்ற 10 பெரும் பணக்காரர்களுக்கு மட்டும் அளிக்கிறார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழரசுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கை தி.பிரகாஷ் விலக்கிக் கொள்ள நேற்று நீதிமன்றத்தில் இணங்கியமையை அடுத்து அதற்கு யாழ். மாவட்ட நீதிமன்றம் நேற்று அனுமதி அளித்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின்தலைவர்மாவை சோ.சேனாதிராசா, செயலாளர் கி.துரைராஜசிங்கம், பொருளாளர் கனகசபாபதி ஆகியோருக்கு எதிராக இந்த வழககுத்தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

ஏற்கனவே கடந்த தடவையில் இந்தப் பதவி விலக்கல் கடிதத்துக்கு எதிராக மாவட்ட நீதிமன்றம் இடைக் காலத் தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.

நேற்று இந்த வழக்கு யாழ். மாவட்ட நீதிபதி இராமக்கமலன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிர்மனுதாரர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், இந்த வழக்குத் தொடர்பில் வழக்காளியுடன் நீதிமன்றுக்கு வெளியே இப்பிரச்சினையை சமரசமாகத் தீர்த்துக் கொள்ளத் தாங்கள் இணங்கியுள்ளனர் என்றும் –

அதற்கு நீதிமன்றம் அனுமதி தரவேண்டும்என்றும்–கோரினார்.

ஆனால் வழக்காளி தரப்பு சட்டத்தரணியான மணிவண்ணனோ, தனது கட்சிக்காரரான வழக்காளி தனக்கு அது தொடர்பில் தெளிவான வழிகாட்டலைத் தரவில்லை என்றார்.

அப்படியானால் அதனை வழக்காளியிடமே நேரில் கேட்கலாம் என்றார் சுமந்திரன்.

ஆனால், சட்டத்தரணி மூலம் வழக்காளி நீதிமன்றத்தில் முன்னிலையாகும்போது அவரின் சட்டத்தரணியை மீறி அதனைக் கோர முடியாது என்றார் நீதிபதி.

அப்படியானல் வழக்கு விசாரணையைத் தொடரலாம் என்று தெரிவித்து இந்த வழக்கில் தமது பூர்வாங்க ஆட்சேபனையை முன்வைத்து வாதிட்டார் சுமந்திரன்.

அந்தப் பூர்வாங்க ஆட்சேபனைமீது பதில் வாதம் செய்ய அழைக்கப்பட்டார் வழக்காளி தரப்பு சட்டத்தரணி மணிவண்ணன்.

அந்த வாதத்தின் போது வழக்காளிவிரும்பினால்வழக்கை விலக்கிக் கொள்ளத் தாம் தயார் என்றும், நீதிமன்றம் நேரடியாக வழக்காளியிடம் அதனைக் கோரலாம் என்றும் சட்டத்தரணி மணிவண்ணன் தெரிவித்தார்.

வழக்காளியின் கருத்தை நீதிமன்றம் கோரியது. தாம் வழக்கைவிலக்கத்தயார்என்றார் வழக்காளி பிரகாஷ்.

நீதிமன்றம் அதற்கு அனுமதி அளித்தது. வழக்கின் செலவுத் தொகை குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது.

நேற்று முதல் வாதத்தின் போதே வழக்கை விலக்க வழக்காளிதரப்புஇணங்கியிருந்தால், வழக்குச்செலவின்றியேவழக்கை விலக்குவதற்குத் தமது தரப்பு இணங்கியிருக்கும் என்று தெரிவித்த சுமந்திரன், இவ்வளவு வாதத்தின் பின்னர் நாங்கள் வழக்கைவிலக்குவதற்குவழக்குத் செலவு செலுத்தப்பட வேண்டும் என்று வாதிட்டார்.

அதனை ஏற்றுக் கொண்ட நீதிபதிவழக்குச்செலவுத்தொகையுடன் விலக்க அனுமதி அளித்தார். (உ)

## விக்கிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை கூடுதல் பணிகளைச் செய்திருந்தால் மகிழ்ச்சியடைந்திருப்பேன் எனவும், உரிய நேரத்தில் வடக்கு மாகாண சபைக்குரிய எங்கள் முதலமைச்சர் வேட்பாளரை அறிவிப்போம் எனவும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்தலைவர் சம்பந்தன் சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்துதற்போதைய தலைமைகள் போய் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புபதிவுபெற்று மாற்றுத் தலைமை உதித்தால் மீண்டும் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்குவேன் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் அறிவித்திருந்தார்.

விக்னேஸ்வரனிடம் இந்தக் கருத்துதொடர்பில்இரா.சம்பந்தனிடம் 'காலைக்கதிர்' நேற்று வினவியது. இதற்கு அவர் பதிலளிக்கும்போது,

தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்குள்மாற்றுத்தலைமைவரவேண்டும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்து அவரின் தனிப்பட்ட கருத்து. இதற்கு இப்போது என்னால் பதிலளிக்க முடியாது. எனினும், விரைவில் உரிய பதிலை வழங்குவேன். அதுவரை பொறுத்திருங்கள் என்றார். (ஐ)

## மன்னார்...

வார காலத்துக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளன எனக் களனிப் பல்கலைக்கழகத்தின்பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவித்தார்.

விரிவுரைகள் உட்பட மேலும் சில காரணங்களைக் கருத்தில் கொண்டே அகழ்வுப் பணி தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது என்றும், ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் மீண்டும் பணி ஆரம்பமாகும் என்றும் அவர் கூறினார்.

மன்னார் சதொச கட்டட வளாகத்தில் கடந்த மே மாதம் ஆரம்பமாகிய இந்த மனிதப் புதைகுழி அகழ்வில், இதுவரை 143 மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த அகழ்வுப்பணிகள், மன்னார் வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி, விசேட வைத்திய நிபுணர் சமிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட சட்ட வைத்திய அதிகாரிகள் மற்றும் பேராசிரியர் ராஜ் சோமதேவ ஆகியோர் தலைமையில் நடைபெறுகின்றன. (ஐ)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகின்றது.

ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து நல்லூரில் திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர் துறந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியில் இன்று நினைவேந்தல் நிகழ்வுகளை உணர்வுபூர்வமாக நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை, தமிழர் தாயகத்தின் பல பகுதிகளிலும் புலம்பெயர் தேசங்களிலும் இன்று திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் எழுச்சிபூர்வமாக இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

## உண்ணாவிரதக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கு தொடுக்கப்படாமல் தடுத்துவைக்கப்பட்டுள்ள இவர்களின் விவரங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 9 பேர் தம்மைக் குறுகிய காலப் புனர்வாழ்வு வழங்கியாவது விடுவிக்குமாறு கோரி கடந்த 14ஆம் திகதியிலிருந்து தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களில் 4 பேர் அநுராதபுரம் சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு நீதிஅமைச்சு நடவடிக்கை எடுக்குமா என்று பிரதியமைச்சர் துஷ்மந்தவிடம் காலைக்கதிர் நேற்று வினவியது –

இதற்கு பதிலளித்த அவர் –

வழக்கு தொடுக்கப்பட்டு, குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டவர்களையே சிறைகளில் தடுத்து வைக்கமுடியும். எனினும், சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ள இவர்களுக்கு எதிராக இன்னும் வழக்குத் தொடுக்கப்படவில்லை. அவ்வாறு வழக்கு தொடுத்து விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறே கைதிகள் கோருகின்றனர். அவர்களின் கோரிக்கை நியாயமானது.

உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கைதிகளின் விவரங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. வழக்கு தொடுத்து விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு பணிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிடைக்கும். – என்றும் கூறினார்.

அதேவேளை, கைதிகளின் தற்போதைய உடல்நிலைமை குறித்து சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் உபுல் தெனியவிடம் காலைக்கதிர் வினவியது.

"கைதிகளின் போராட்டம் தொடர்கின்றது. அவர்கள் உண்ண மறுக்கின்றனர்." என்று அவர் கூறினார். (ஐ)

## நல்லூர்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிவான் நீதிமன்று.

நினைவுத் தூபியைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள கம்பி வேலி மற்றும் பந்தலை அகற்றுவதற்கான இடைக்காலக் கட்டளையை வழங்கவும் நீதிமன்று மறுப்புத் தெரிவித்தது.

தூபியைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள இரும்புக் கம்பி வேலியை அகற்றுவதல் மற்றும் நினைவேந்தல் அலங்காரப் பந்தலை அகற்றுவது தொடர்பான வழக்கை வரும் ஒக்ரோபர் 29ஆம் திகதிக்கு நீதிவான் ஒத்தி வைத்தார்.

நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள இரும்புக் கம்பி வேலியை அகற்றுவதற்கும் அங்கு தீலிபனின் உருவப்படம் அமைக்கப்பட்டுள்ள அலங்காரப்பந்தலை அப்புறப்படுத்துவதற்கும் யாழ். மாநகர சபை ஆணையாளருக்கு உத்தரவிடுமாறு கோரி, யாழ்ப்பாணம்நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த வழக்கு நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. யாழ். மாநகர சபை ஆணையாளர் மன்றில் முன்னிலையானார்.

அவர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகிநீண்டசமர்ப்பணத்தை மன்றில்முன்வைத்தார். பொலிஸ் அதிகாரியும் சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

தியாகி திலீபனின் நினைவுத் தூபி அமைக்க நாடாளுமன்ற உறுப்பினர்களால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. அந்தத் தூபியை அமைக்கும் முகவராகவே யாழ்ப்பாண மாநகர சபை உள்ளது. எனவே திலீபனின் நினைவுத் தூபி விவகாரத்தில் யாழ்ப்பாண மாநகர சபையை நீதிமன்றுக்கு இழுக்க முடியாது என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் தனது சமர்ப்பணத்தைச் செய்தார்.

இருதரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த மன்று, இடைக்காலத்தடை உத்தரவுக் கோரிக்கைகளை நிராகரித்தமையோடு வழக்கை ஒத்திவைத்தது.

இதேவேளை, நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத்தூபியில் கடந்த 10 நாள்களாக அஞ்சலி நிகழ்வை முன்னெடுக்கும் தரப்பினர் எனத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் சட்டத்தரணி கு.குருபரன் மன்றில் தோன்றி சமர்ப்பணம் செய்ய அனுமதி கோரினார்.

எனினும் வழக்கில் எதிராளியாகக் குறிப்பிடப்படாத தரப்புக்கு சமர்ப்பணம் முன்வைக்க மன்று அனுமதி மறுத்தது. (ஐ–7)

## கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளது.

அலரி மாளிகையில் இடம்பெற வுள்ள இந்தப் பேச்சில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சட்டமா அதிபர் ஆகியோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தன், கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் தீவிரமடைந்து வருகின்றமை குறித்து கூட்டமைப்புப் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் நேற்றுக் காலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத் துக்கும் கொண்டு வந்தார்.

இதனை அடுத்து நேற்று மாலை பிரதமர் அலுவலகத்தில் இருந்து சுமந்திரன் எம்.பியுடன் தொடர்பு கொண்ட அதிகாரிகள், இன்று பிற்பகல் 3 மணிக்கு அரசியல் கைதிகள் தொடர்பில் பேச்சு இடம்பெறும் என்ற தகவலை வழங்கினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அரசியல் கைதிகளின் உண்ணாவிரதம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் முன்னர் பிரதமர் ரணிலில் விக்கிரமசிங்கவுடன் பேசியிருந்தார். இதன்போது வெளிநாடு சென்றுள்ள சட்டமா அதிபர் நாடு திரும்பியதும் இது குறித்துப் பேச்சு நடத்தப்படும் எனப் பிரதமர் பதலளித்திருந்தார்.

இதன் தொடர்ச்சியாகவே இன்று இந்தப் பேச்சு இடம்பெறவுள்ளது. (ஐ)

## கோட்டாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்காக அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேனா குற்ற விசாரணைப் பிரிவுக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்தார். அவரிடம் நான்கு மணிநேரம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

வாக்குமூலம் அளித்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே பொன்சேகா மேற்படி தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டுதாக்கப்பட்ட சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று கோட்டாபய வாக்குமூலம் அளித்துள்ளார். அதுபற்றி என்னிடம் கேட்கப்பட்டது.

கொழும்பில் நடைபெற்ற தாக்குதல்கள், கடத்தல்கள் போன்றன கோட்டாபயவால் வழிநடத்தப்பட்ட குழுவாலேயே முன்னெடுக்கப்பட்டன. அன்றும் இதைச் சொன்னேன். இன்றும் தெளிவாகக் கூறினேன்.

என்னைச்சிறையில் அடைத்த பின்னர், எனக்குச் சார்பான படை அதிகாரிகளைக் கைதுசெய்து – கொடுமைப்படுத்தி – சிறையில் வைத்து சட்டவிரோதத் தாக்குதல்கள், கொலைகளுடன் எனக்கு தொடர்பிருக்கின்றது எனக் கதை சோடிக்கப் பார்த்தனர். அது கைகூடவில்லை. இன்றும் முயற்சிக்கின்றனர். ஆனால், அதுவும் கைகூடாது என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

நான் போரை வழிநடத்தினேன். எனவே, கொழும்பில் போருக்கு புறம்பாக நடந்த சம்பவங்களுக்கு என்னால் பொறுப்பு கூறமுடியாது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்ற வகையில் கோட்டாவே பொறுப்புகூற வேண்டும் – என்றார். (ஐ)

## தொகுதிகளைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றிகரமாக எதிர்கொள்வதற்குத் தயாராகுமாறு ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் விசேட கூட்டமொன்று கட்சித் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுக் கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது.

கட்சியின் பொதுச்செயலாளர், தவிசாளர், தேசிய அமைப்பாளர் உட்பட உயர்மட்ட பிரமுகர்களும், தொகுதி அமைப்பாளர்களும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது தொகுதி மட்டத்தில்நிலவும்கட்சிசார்ந்த பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அவற்றை எவ்வாறுதீர்ப்பதுஎன்பதுகுறித்தும் ஆராயப்பட்டுள்ளன.

அத்துடன், புதிய தொகுதி அமைப்பாளர்கள் சிலரை நியமிக்கவும், 'கம்பெரலிய' மற்றும் சமூர்த்தி வேலைத்திட்டங்களின் ஊடாக கிராமமட்டங்களில் ஆழமாகக் காலூன்றுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மாகாணசபைத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்குத் தயாராகுமாறு கட்சி உறுப்பினர்களுக்குப் பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு – கிழக்கில் ஐ.தே.கவின் அரசியல் செயற்பாடுகள் சம்பந்தமாகவும் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ஐ)

## வறுமையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலக வங்கியின் ஏற்பாட்டில் கொழும்பில் நேற்று நடைபெற்ற தகவமைப்பு சமூகப் பாதுகாப்பு தொடர்பான மாநாட்டில் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான உலக வங்கியின் வதிவிடப் பணிப்பாளர் ஐடா ஸ்வராய் ரிடிஹொப் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒருவரது வருமானம் அதிரடியாக 20 வீதத்தால் குறையும் பட்சத்திலேயே 5.7 வீதமானோர் வறுமையில் சிக்கும் அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், இலங்கையின் வருமானம் மற்றும்அபிவிருத்தியில் பலநாடுகள் பொறாமை கொண்டிருந்தன. இலங்கையில் தீவிர வறுமை ஒரு வீதத்தினால் குறைக்கப்பட்டதுடன், தேசிய வறுமைக் கோட்டில் வறுமை வீதம் 4.1 வீதமாகக் குறைவடைந்திருந்தது.

இலங்கை வருடாந்தம் இயற்கைப் பேரழிவுகளைச் சந்தித்து வருகிறது. கடந்த 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் கடும் வெள்ளம் மற்றும் கடும் வறட்சிக்கு இலங்கை முகங்கொடுத்தது.

கடந்த வாரம் வெளியிடப்பட்ட உலக வங்கியின் அறிக்கையில், அதிகரித்துவரும் வெப்பநிலை மற்றும் காலநிலை மாற்றம் காரணமாக இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.0 சதவிகிதம் செலவு ஏற்பட்டதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. இது 2050 ஆண்டளவில் முழு மக்கள் தொகையின் அரைவாசி பேரின் வாழ்க்கைத் தரத்தை மோசமடையச் செய்யும் என்றும் எடுத்துக் காட்டப்பட்டது.

இது நேரடியாகப் பாதிக்கப்படுவோருக்கு அதிகதாக்கத்தை ஏற்படுத்துவதுடன், இதன் தாக்கம் அனைவராலும் மறைமுகமாக உணரப்படும். – என்றார் அவர்.



# ஆப்கான் கிரிக்கெட் அணியின் வீரரை நாடிய சூதாட்ட தரகர்கள்

விளையாட்டு உலகில் தற்போது சூதாட்டம் அதிகரித்து வருகின்றது. அதிலும் குறிப்பாக கிரிக்கெட் விளையாட்டில் சற்று அதிகம் என்பதே, நிதர்சனமான உண்மை. இதற்கு அண்மைய தகவல்கள் முக்கிய சான்று.

இதுபோன்ற சர்சைக்குரிய சூதாட்டம் தற்போது, கிரிக்கெட் உலகில் புதிதாக அறிமுகமாகியுள்ள ஆப்கானிஸ்தான் அணியையும் தாக்க தொடங்கியுள்ளது.

அண்மைய காலமாக கிரிக்கெட் உலகில் ஜொலித்து வரும் அணி என்றால் யுத்த பூமியில் மலர்ந்த ஆப்கானிஸ்தான் அணி தான், நம் நினைவுக்கு வரும்.

இந்த அணியையும் குறி வைத்து தற்போது, சூதாட்ட தரகர்கள் தங்களது பணியை தொடர ஆரம்பித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி, தற்போது ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆசியக் கிண்ண தொடரில் விளையாடி வருகின்றது.

அந்த அணி இத்தொடரின் இறுதிப் போட்டிக்கான வாய்ப்பை தவறவிட்டாலும், இலங்கை, பங்களாதேஷ் அணிகளை வீழ்த்திய தோடு, முக்கிய போட்டிகளில் எதிரணிகளுக்கு கடும் நெருக்கடியும் கொடுத்தது.

இதற்கிடையில், இத்தொடரின் போது, ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளரும், ஆரம்ப துடுப்பாட்ட வீரருமான மொஹமட் ஷ்சாத்தை சூதாட்ட தரகர்கள் நாடியுள்ளனர். இதனை சர்வதேச கிரிக்கெட் சபையும் உறுதிப்படுத்தியுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், 'சார்ஜாவில் நடக்கவுள்ள ஆப்கானிஸ்தான் பிரீமியர் லீக் தொடரில், 'ஸ்பொட் பிக்சிங்' சூதாட்டத்தில் ஈடுபட மொஹமட் ஷ்சாத்தை சில சூதாட்ட தரகர்கள் தொடர்பு கொண்டிருப்பது தெரிய வந்துள்ளது.

இது குறித்து ஐ.சி.சி., ஊழல் தடுப்பு குழு தீவிரமாக கண்காணித்து வருகிறது. கடந்த 12 மாதங்களில் 5 சர்வதேச அணித்தலைவர்களிடம் சூதாட்ட தரகர்கள் தொடர்பு கொண்டிருப்பது தெரிய வந்துள்ளது.

இதில் 4 பேர் டெஸ்ட் போட்டியில் விளையாடுபவர்கள். இக் காலகட்டத்தில் 32 விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளது. இதில் 8 பேர் கண்டறியப்பட்டு தடைவிதிக்கப்பட்டுள்ளனர். இதுபோன்ற குற்றங்கள் மீண்டும் நடக்காதபடி சில திட்டங்களை செயல்படுத்த ஐ.சி.சி., ஊழல் தடுப்பு குழு ஆலோசித்து வருகிறது, என கூறினார்.

ஆப்கானிஸ்தான் பிரிமியர் லீக் ரி-20 தொடர், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம், 5ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை சார்ஜாவில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் சூதாட்டத்தில் ஈடுபடவே தரகர்கள் அவரை நாடியுள்ளனர்.

# டோனியின் 'குறி' தப்பாது



பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் டி.ஆர்.எஸ்.முறையை துல்லியமாகக் கணித்து இமாம் உல் ஹக்கை ஆட்டமிழக்கச் செய்த டோனியின் திறமையைக் கண்டு டுவிட்டரில் பாராட்டுக்கள் குவிந்த வண்ணமுள்ளன.

கிரிக்கெட் போட்டிகளின் போது சில சந்தர்ப்பங்களில் ஆட்டமிழப்பு தொடர்பாக மைதான நடுவர்களின் தீர்ப்பானது சர்ச்சையை கிளப்பிவிடுகின்றது.

இதனால் நடுவரின் தீர்ப்பை மேன்முறையீடு செய்வதற்காக கிரிக்கெட்டில் டி.ஆர்.எஸ் முறை அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளது.

அதாவது நடுவரின் தீர்ப்பில் சந்தேகம் தோன்றினால் அதை எதிர்த்து துடுப்பாட்ட வீரர் அல்லது களத்தடுப்பு அணியின் தலைவர் ரிவ்வியூ கேட்கலாம்.

குறிப்பாக பந்து வீசு அணி, ரிவ்வியூ கேட்கும்போது பந்து வீச்சாளரும், விக்கெட் காப்பாளரும் தான் முக்கிய பங்கு வகிப்பார்கள். பந்து சரியாக பிட்ச் ஆனதா? பந்து துடுப்பாட்ட மட்டையில் பட்டதா? ஸ்டம்பை தாக்குமா? ஸ்டம்பிற்கு மேல் செல்லுமா? என்பதை இவர்கள்தான் சரியாக கணிக்கவேண்டும்.


இதில் இந்திய அணியின் முன்னாள் தலைவரும் விக்கெட் காப்பாளருமான டோனி நன்கு அனுபவமுள்ளவர். இவர் ரிவ்வியூ கேட்டால் அது கட்டாயம் ஆட்டமிழப்பாகத்தான் இருக்கும்.

ஒருமுறை ஜடேஜா டோனியின் பேச்சுக்குச் செவிசாய்க்காது ரிவ்வியூ கேட்க வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆனால் டி.ஆர்.எஸ் வெற்றி பெறவில்லை. இதனால் டோனி ஜடேஜா மீது கடும் கோபம் கொண்டார்.

இந்நிலையில் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற 14 ஆவது ஆசியக் கிண்ணத் தொடரின் இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான சுப்பர் 4 சுற்றுப் போட்டியின்போது பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடி வந்தது.

முதல் 7 ஓவரில் பாகிஸ்தான் விக்கெட்டை இழக்கவில்லை. இதற்கடுத்து 8 ஆவது ஓவரை சாஹல் வீசினார். இந்த ஓவரின் கடைசி பந்தை இமாம் உல் ஹக் முன்னாள் வந்து தடுத்து ஆட முயன்றார். அப்போது பந்து கால்காப்பை தாக்கியது. மிக அதிக தூரம் முன்னாள் வந்து ஆடியதால் பந்து ஸ்டம்பிற்கு மேல் சென்று விடுமோ? என்ற சந்தேகம் சாஹலுக்கும் அணித் தலைவர் ரோஹித் சர்மாவிற்கும் எழுந்தது.

# வென்றது ஜூவான்டஸ்



இத்தாலிய உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரிஏ தொடரில், புரோஸினோனே கழகத்தின் மைதானத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற அவ்வணியுடனான போட்டியில் ஜுவான்டஸ் வென்றது.

இந்தப் போட்டியில் 72 சதவீதமான நேரம் ஜுவான்டஸே பந்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோதும் போட்டி முடிவடைய 9 நிமிடங்கள் இருக்கையில் கிறிஸ்டியானோ ரொனால்டோ பெற்ற கோலின் மூலமே முன்னிலை பெற்ற ஜுவான்டஸ் போட்டியின் இறுதி நிமிடங்களில் பெடெரிக்கோ பேர்னார்ட்டெஸ்கி பெற்ற கோலோடு இறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

இதேவேளை, டொரினோ அணியின் மைதானத்தில் நேற்று முன் தினம் இடம் பெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் நாப்போலி அணி வென்றது. நாப்போலி சார்பாக, லொரென்ஸோ இன்சீனியா இரண்டு கோல்களையும் சிமோனே வேர்டி ஒரு கோலையும் பெற்றதோடு, டொரினோ சார்பாகப் பெறப்பட்ட அன்ட்ரியா பெலோட்டி பெற்றிருந்தார்.



# சிறந்த உதைபந்து வீரராக லூகா மோட்ரிச் தெரிவு

விளையாட்டுத் துறையில் கொடிகட்டி பறக்கும் வீரர்கள், பணத்தை விட அவர்களின் திறமைக்குக் கிடைக்கும் விருதுகளையே அதிகம் விரும்புகின்றனர்.

ஏனென்றால் அவர்கள் பெறும் பணத்தையும் விட, காலந்தோறும் அவர்களின் புகழ் பாட அந்த விருதுகளே பேசும் என்பதால் அவர்கள் விருதுகளையே அதிகம் நேசிக்கின்றனர்.

சர்வதேச உதைபந்துச் சம்மேளனம், ஆண்டுதோறும் உலகின் சிறந்த உதைபந்து வீரர், வீராங்கனை, ஆண் - பெண் பயிற்சியாளர், சிறந்த கோல், இரசிகர்கள், என்போரைத் தேர்வு செய்து விருது வழங்கி கௌரவித்து வருகிறது.

இதன்படி, நடப்பு ஆண்டுக்கான வெற்றியாளர்களுக்கு விருதுகள் வழங்கும் நிகழ்வு, நேற்று முன்தினம் லண்டனில் பிரமாண்டமாக இடம்பெற்றது.

இதில், 2018ஆம் ஆண்டுக்கான சிறந்த உதைபந்து வீரருக்கான விருது, குரோஷியா அணியின் தலைவரான லூகா மோட்ரிச்சுக்கு வழங்கப்பட்டது. சிறந்த பெண் வீரருக்கான விருது பிரேசில் வீராங்கனையான மார்டாவுக்கு வழங்கப்பட்டது.

இதுதவிர, சிறந்த கோலுக்கான விருதுக்கு, எவர்டன் அணிக்கெதிராக லிவர்பூல் கழக அணியின் நட்சத்திர வீரரான மொஹமட் சாலா அடித்த கோல் தெரிவு செய்யப்பட்டது.

சிறந்த கோல் காப்பாளராக பெல்ஜியம் மற்றும் ரியல் மட்ரிட் அணியின் கோல் காப்பாளர் திபோட் கோர்டொயிஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

ஆண்களுக்கான சிறந்த பயிற்சியாளராக உலகக்கிண்ணத்தை ஏந்திய பிரான்ஸ் அணியின் பயிற்சியாளர் டிடியர் டிஸ்சம்ப்ஸ் தெரிவு செய்யப்பட்டார்.

பெண்களுக்கான சிறந்த பயிற்சியாளராக லியோன் அணியின் ரெய்னால்ட் பெட்ரோஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

இரசிகர்கள் விருது, பெரு இரசிகர்களுக்கு வழங்கப்பட்டது.

முன்னதான, 2018ஆம் ஆண்டுக்கான விருதை வழங்குவதற்காக 5 முறை பிபாவின் சிறந்த வீரர் விருது பெற்ற கிறிஸ்டியானோ ரொனால்டோ, லிவர்பூல் அணிக்காக 43 கோல்கள் அடித்துள்ள மொஹமட் சாலா மற்றும் லூகா மோட்ரிச் ஆகிய மூவரும் இறுதிப் பட்டியலில் இடம் பெற்றிருந்தனர்.

இந்நிலையில், ரொனால்டோ மற்றும் மொஹமட் சாலா ஆகியோரை பின்னுக்கு தள்ளி 33 வயதான லூகா மோட்ரிச், 2018ஆம் ஆண்டிற்கான உலகின் சிறந்த உதைபந்து வீரராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ரஷ்யாவில் நடைபெற்ற உலகக் கிண்ண உதைபந்துத் தொடரில், முதல் முறையாக குரோஷியா அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இதற்கு அணித்தலைவர் மோட்ரிச்சின் பங்களிப்பு முக்கிய காரணமாக அமைந்தது. உலகக் கிண்ண தொடரில் சிறப்பான பங்களிப்பை வெளிப்படுத்தியதால், இதற்காக அவருக்கு தங்க உதைபந்து விருதும் வழங்கப்பட்டது.

அத்தோடு சமீபத்தில் நடைபெற்ற 2017-18ஆம் ஆண்டுக்கான ஐரோப்பிய உதைபந்துச் சங்கங்களின் ஒன்றியம் சார்பில் வழங்கப்படும் விருதும், லூகா மோட்ரிச்சுக்கு வழங்கப்பட்டது.

இதிலும், மூன்று வீரர்கள் கொண்ட இறுதிப் பட்டியில், ரொனால்டோ மற்றும் மொஹமட் சலா ஆகியோரை பின்னுக்குத் தள்ளி லூகா மோட்ரிச் விருது வென்றிருந்தார்.

மேலும், பார்சிலோனா அணியின் தலைவரும், நட்சத்திர வீரருமான ஆர்ஜென்டினாவின் லியோனல் மெஸ்ஸியின் பெயர், இந்த பட்டியலில் கூட இடம் பெறாதது, அவர்களின் இரசிகர்களை கடும் அதிருப்தியடைய வைத்துள்ளது.

# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி; அரசை சாடுகிறார் மஹிந்த



கொழும்பு, செப். 26

இந்தியாவின் பொருளாதா ரத்தை இலங்கையின் பொருளாதா ரத்துடன் ஒப்பிடமுடியாது எனத் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ , தேசிய உற்பத்திகளுக்கு எதிரான இறக்கு மதிகள் அதிகரிப்பே ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சி யடைவதற்கு காரணம் எனவும் குறிப் பிட்டார்.

ரூபாவின் தொடர் வீழ்ச்சி குறித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த நேற்றுச் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக் கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு -

நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்ததி லிருந்து அமெரிக்க டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வருகின் றது. தற்போது இந்நிலைமை உக் கிரமடைந்துள்ளது. 2014 ஆம் ஆண்டு இறுதியில் 131 ரூபாவாகக் காணப்பட்ட டொலரின் பெறுமானம் இன்று 170 ரூபாவாக வீழ்ச்சிய டைந்துள்ளது.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சிய டைவதனால் பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படுகின்றது என அரச தரப்பு குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

எனது ஆட்சி காலத்தில் அதா வது 2007 - 2008 வரையான காலப்பகுதியில் உலக பொருளாதார நெருக்கடியின் காரணமாக தென் கொரியா, இந்தோனேஷியா, தாய் லாந்து, மலேசியா, பிலிப்பைன்ஸ் உட்பட ஆசிய நாடுகளில் பணப் பெறுமதி அமெரிக்க டொலருடன் ஒப்பிடப்பட்டு பாரிய வீழ்ச்சி அடைந் தது. அன்று காணப்பட்ட உலக பொருளாதார நெருக்கடி இலங் கையிலும் எவ்விதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் பொருளாதாரக் கொள்கைகள் நடைமுறைப்படுத் தப்பட்டன.

இந்தியாவின் பொருளாதாரத்தை இலங்கையின் பொருளாதாரத்து டன் ஒப்பிடமுடியாது. இந்தியாவின் பொருளாதாரத்தின் ஒரு பகுதியே இலங்கை. எனது ஆட்சி காலத்தில் காணப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் இன்று ஒரு தனிக் கட்சியின் பொருளாதாரக்கொள்கை யாக பின்பற்றப்பட்டு வருகின்றது.

இன்று 4 வீதத்துக்கும் குறை வான பொருளாதார வளர்ச்சியே காணப்படுகின்றது. அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றம், சர்வதேசத்தில் முன்னிலைப்பட வேண்டும் என்ற நோக்கில் தேசிய உற்பத்திகளுக்கு எதிரான இறக்குமதி கள் இடம்பெறுகின்றமையின் காரணமாகவே ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைகின்றது - என்றுள்ளது. (ஐ)

# இரு காற்றாலை மின் திட்டங்கள் சாவகச்சேரியில் அமைக்கப்படும்

## 28 மில்லியன் டொலர் முதலீடு

கொழும்பு, செப். 26

சாவகச்சேரியில், தலா 10 மெகாவாட் மின் உற்பத் தித் திறன் கொண்ட இரண்டு காற்றாலைகள் அமைக் கப்படவுள்ளன. தேசிய அபிவிருத்தி வங்கிக்கும், சீலெக்ஸ் நிறுவனத்துக்கும் இடையில் இது தொடர் பான கடன் உடன்பாடு கையெழுத்திடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், ஒரு அலகு மின்சாரத்தை 10.90 ரூபாவுக்கு அடுத்த 20 ஆண்டுகளுக்கு உற் பத்தி செய்ய முடியும். தற்போது இலங்கையில் ஒரு அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு இலங்கை மின்சார சபை 20 ரூபாவைச் செலவிடுகிறது.

இந்த இரண்டு காற்றாலைகளிலும் மொத்தமாக 8 காற்றாடிகள் பொருத்தப்பட்டு, ஒவ்வொன்றில் இருந்தும், தலா 2.5 மெகாவாட் மின்சாரத்தை உற் பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தத் திட்டத்துக்கான மொத்தச் செலவு 28 மில்லியன் டொலர் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள் ளது. இதற்கு தேசிய அபிவிருத்தி வங்கி 300 கோடி ரூபாவைக் கடனாக வழங்கவுள்ளது.

எஞ்சிய நிதியை சீலெக்ஸ் பொறியியல் நிறுவனம் மற்றும் லங்கா வென்சேர்ஸ் நிறுவனம் என்பன முத லீடு செய்யும்.

ஐரோப்பிய தர நியமங்களுக்கு அமைய உருவாக்கப்படும் இந்தக் காற்றாலைகள் மூலம் கிடைக்கும் மின்சாரம், 2019 நடுப்பகுதியில் இருந்து தேசிய மின் விநியோகத்துக்குக் கிடைக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மலையகத் தொழிலாளர் விடயத்தில் நல்லாட்சி அரசு நழுவிவிட முடியாது!

## அமெரிக்காவிலிருந்து மனோ அதிரடி அறிக்கை



நியூயோர்க், செப். 26

மலையகத் தொழிலாளர் வாழ்வாதாரம் தொடர்பில், கடந்து வந்த எல்லா அரசு களையும் போல், நல்லாட்சி அரசும், தமக்கு இதில் எந்தவித தொடர்பும் இல்லை எனக் கைகளைக் கழுவிக்கொள்ள இடந் தர முடியாது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க, அரசகரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றுள்ள அமைச்சர் மனோ, அங்கிருந்து விடுத் துள்ள அறிக்கையிலேயே இவ்வலி யுறுத்தலை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மலைநாட்டில் உழைக்கும் பாட்டாளிகள், சம்பளம் வாங்கும் தினக்கூலி தொழிலா ளர் அல்லர். நாங்கள் இலங்கைத் திரு நாட்டின் குடிமக்கள் என்பதை வலியு றுத்துவோம்.

தோட்டக் கம்பனிகளின் கைகளில் மாத்திரம், மலையகத்தில் உழைக்கும், சுமார் இரண்டரை இலட்சம், பாட்டாளி களின், நிகழ் - எதிர் காலங்களை முழுக்க முழுக்கக் கையளிக்க முடியாது. 22 தனியார் தோட்ட முகாமை நிறுவனங்கள் மற்றும் மூன்று அரசு தோட்ட நிறுவனங் களின் நாள் சம்பளத்துக்கு அப்பால் அரசின் பங்களிப்பும் அவசியம்.

தோட்ட நிறுவனங்களும், தொழிற் சங்கங்களும் மாத்திரம், பேச்சுக்களை நடத்தி முடித்து கொள்ளுங்கள் எனக் கூறி, எமது மலையகத் தொழிலாளர் வாழ்வாதாரம் தொடர்பில், கடந்து வந்த எல்லா அரசுகளையும் போல், நமது அரசும், தமக்கு இதில் எந்தவித தொடர்பும் இல்லை எனக் கைகளைக் கழுவிக் கொள்ள இடந்தர முடியாது. இதே மாதி ரிப் பிரச்சினை, காலியில், அம்பாந் தோட்டையில், பொலனறுவையில் வாழும் மக்களுக்கு ஏற்பட்டிருந்தால், இந்த அரசு இப்படி இருந்திருக்காது.

தமிழ் முற்போக்குக் கூட்டணி இடம் பெறும் அரசாக இருந்தாலும், குற்றம் குற்றமே என நாமிருக்கும் அரசுக்கும் சுட்டிக்காட்ட வேண்டிய கடப்பாடு எமக்கு இருக்கின்றது. அதை தமிழ் முற்போக் குக் கூட்டணி செய்யும். அதை நான் வழி நடத்துவேன்.

தோட்டத் தொழிலாளர்கள் வருமானம் சம்பந்தமாக அரச தலைவர்களான, இப்போது நியூயோர்க்கில் என்னுடன் இருக்கின்ற, ஜனாதிபதி மைத்திரியிடம் இதைச் சொன்னேன். வருமுன் கொழும் பில் பிரதமர் ரணிலிடமும் இதைச் சொன் னேன். நாட்கூலி சம்பளத்துக்கு அப்பால், தோட்டங்களில் வாழும் மலையக மக் களின் வருமானங்களை அதிகரிக்கும் முகமாக, மேலதிக வாய்ப்புகளை வழங்க இலங்கை அரசு கடமை பட்டுள்ளது என் அரசு தலைவர்களிடம் கூறியுள்ளேன்.

இந்நாட்டில், அரசியல், சமூக, கல்வி, பொருளாதார ஆகிய ஏதாவது காரணங் களால், குறை வளர்ச்சி கண்டுள்ள பிரி வினர் இருந்தால், அவர்களைக் கண்ட றிந்து, நிவாரணம் வழங்கி, அவர்களை தேசிய மட்டத்துக்கு கொண்டு வர வேண் டிய அதிகாரம் எனது அமைச்சுக்கு இருக் கின்றது. இது தொடர்பில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், நானும் கடந்த வருடம் ஒரு கூட்டு அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்பித்தோம். ஆகவே தோட்ட தொழிலாளர்கள் பிற்படுத்தப்பட்ட பிரிவி னர் என்ற அடிப்படையில், இது தொடர் பான அமைச்சரவைப் பத்திரம் ஒன்றையும் விரைவில் சமர்பிக்க நான் முடிவு செய் துள்ளேன் - என்றுள்ளது. (ஐ)




ஐ.நா. மனதி உரிமைகள் சபையின் பரிந்துரைகளை இலங்கை அரசு நிறைவேற் றத் தவறும் பட்சத்தில் இலங்கை அரசை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு பரிந்துரை செய்யுமாறு பிரித்தானிய அரசை வலியுறுத்தி மனுவொன்றை சமர்ப்பிப்பதற்காக கையொப்பம் சேகரிக்கும் நடவடிக்கைகளை லண்டனில் பல பாகங்களிலும் நாடுகடந்த தமிழீழ அரசு முன்னெடுத்து வருகின்றது.

# இலங்கை-இந்திய உடன்பாட்டின் கீழ் அரசியல் கைதிகளை விடுவியுங்கள்!

## அரசிடம் கோருகிறார் ஆனந்தசங்கரி

கொழும்பு, செப். 26

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழ் அரசியல் கைதி களை விடுதலை செய்யுமாறு தமிழர் விடு தலைக் கூட்டணியின் செயலாளர் நாய கம் வீ.ஆனந்தசங்கரி கோரியுள்ளார்.

நீதியமைச்சர் தலதா அத்துக் கோரளவுக்கு நேற்று அனுப்பி வைத் துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

சிறைச்சாலைக்குள் தமது விடு தலையைக் கோரி உண்ணாவிரதம் இருப் போரின் துயரம் யாதெனில், நீண்ட கால மாக தாம் எதுவித விசாரணையும் இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையேயாகும்.

அதிகாரிகளின் குறிப்பாக நீதி அமைச் சர் என்ற வகையில் உங்களது அதி கவ னத்துக்கு எடுக்கவேண்டிய விடயம் யாதெனில், கடந்த காலத்தில் கடும் குற்றச் செயலில் ஈடுபட்டுக் குற்றவாளியாக இனம் கண்டு மரண தண்டனை விதிக் கப்பட்டவர்கள், பல்வேறு காரணங்களினால் அவர்களின் மரண தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டு 14 ஆண்டுகளில் விடுதலையாவது சகஜம்.

நான் நீதி அமைச்சராகிய உங்களை வினயமாகக் கேட்டுக்கொள்வது, மேலும் தாமதிக்காது தடுப்பில் உள்ளவர்களின் உறவுகளுக்குரிய அனுதாபத்துடன் இப்பிரச்சினையை அணுகுமாறு வேண்டு கிறேன்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் சந்தேகநபர்கள், குற்றம் சாட் டப்பட்டவர்கள் மற்றும் குற்றவாளிகளாக இனம் காணப்பட்டவர்களைக் கூட விடுதலை செய்ய முடியும் என்பதை உலகம் முழுவதும் அறியும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, தடுப்பில் உள்ளவர்களின் மனைவி, மக்கள் பல வருடங்களாகத்தனை துன்பங்களையும், கஸ்டங்களையும் அனுபவிக்கின்றனர் என்பதை ஓர் தாயாக நீங்கள் நன்கு அறிவீர்கள்.

மனிதாபிமான அடிப்படையில் பயங்கரவாதச் சட்டத்தை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, இந்த விடயம் இயற்கை யான நீதிக்கு உட்பட்டதாக அமைய வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.09.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.